பக்கம் 10 விலை ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 22 (04-02-94) வெள்ளிக்கிழமை ஓசை 351

## யாழ்/வன்னி தொடர்பு நடைமுறைகள் அறிவிப்பு

யாழ்/வன்னித் தொடர்புச் சேவை வன்னியில் கண்டி வீதியை மையமாகக் கொண்டும் கிளிநொச்சியில் மூன்று மைல் சுற்றுவட்டாரங்களுக்குள்ளும் குஞ்சுப் பரந்தன் இறங்கு துறைப் பகுதியிலும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது. இச் சேவை மூலம் திருமணச் செய்திகள், திருமண வாழ்த்துக்கள், சுப வாழ்த்துக்கள், வியாபாரச் செய்திகள், மரணச் செய்திகள், மற்றும் அனுதாபக் குடும்பச் செய்திகளையும் அவசரமாகவோ அல்லது சாதாரணமாகவோ மக்கள் பரிமாறிக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான பேச்சுக்கள் குறித்து எமக்குத் தகவல் ஏதுமில்லை

## புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் தொடரும் என்கிறார் ராணுவ அதிகாரி

[கொழும்பு]

கொழும்பு அதிமேற்றிராணியார் மேதகு மார்க்கஸ் பெர்னாண்டோ சமாதானத் தீர்வுக்கும், யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால் இராணுவத்தைப் பொறுத்தவரையில் எமக்கு இது பற்றி அறிவித்தல் எதுவும் தரப்படவில்லை என்று இராணுவ தரப்புப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டதாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேலும் அவ் அதிகாரி வடக்கில் நடைபெறும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தளர்த்தப்படாது என்றும், இனங்காணப்பட்ட புலிகளின் நிலைகள் மீது இப்போது தாக்குதல்மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் பாரிய தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்வது குறித்து அவர் அபிப்பிராயம் தெரிவிக்க மறுத்துவிட்டார். எமது எதிர்காலத் திட்டங்கள் மற்றும் தாக்குதல் இலக்குகள் பற்றி அல்லது தாக்குதல் நடக்கவிருக்கும் நேர காலத்தைப் பற்றிய தகவல்களை நாம் வெளியிடப்போவதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## வடக்கு கிழக்கு யுத்தம்: புலிகள் தீர்மானிக்கின்றனர்

லங்கா கார்டியன் தெரிவிப்பு

வடக்கு கிழக்கு யுத்தத்தை புலிகளே முடிவு செய்கின்றார்கள். ஜனகபுரம் இராணுவ முகாம் தகர்ப்பு உட்பட பலதாக்குதல்கள்இதனை காட்டுகின்றன என லங்கா கார்டியனில்வெளியான ''விடுதலைப் புலிகளின் யுத்த சவால்'' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும், யுத்த முனையில் இருக்கும் படையினருக்குத் தேவையான அத்தியாவசியப்பொருள்களை மக்களிடம் கேட்டு வாங்கும் சிறிலங்கா அரசு தனது படைகளுக்குத் தேவையான ஆயுதங்களை எப்படி கொள்வனவு செய்யப்போகின்றது என கேள்வி எழுப்பியுள்ளதுடன்,

இராணுவத்தினருக்கு எதிராக புலிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதலின்போது படையினர் படை அணிகளை விட்டு விட்டு ஓடுகின்றனர். அத்துடன் படை உயர் மட்டத்தில் ஒவ்வொருவரும் எதிரெதிரான போக்குகளைக் கொண்டுள்ளனர் எனவும்,

பெருமளவு படை பலத்துடனும் ஆயுத தளபாடங்களுடனும் வந்த இந்திய அமைதிப் படை விடுதலைப் புலிகளை வெல்ல முடியவில்லை என்பதை சிறிலங்கா அரசு நினைவில் கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

## சிறிலங்காவின் பொருளாதாரம் யுத்தத்தினால் பெரும் நெருக்கடி

(கொழும்பு)

யுத்தத்தினால் ஏற்பட்ட அதிக செலவினத்தினால் சிறிலங்கா அரசாங்கத்தில் பெரிய அளவில் பொருளாதார தாக்கம் ஏற்பட்டு இருப்பதாகவும் பல இன்னல்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டி இருப்பதாக தெரிய வருவதாக 'சந்தேசிய' வானொலி தெரிவித்துள்ளது.

தற்போது கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் இடத்து இவை மிக தெளிவாக தெரிவதாகவும், எனவே இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் ஒருமுடிவுக்கு வராதவிடத்து யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற அழுத்தத்தை அரசாங்கத்திற்கு புறம்பாகச் செயற்படும் நிறுவனங்கள் (10ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் பேசிய மேடையின் அருகில் கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

ஹினிதுவ தொகுதியில் நாகொட என்ற இடத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன் கைக்குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. பிரதமர் பேசவிருந்த மேடைக்கு அருகாமையில் இருந்த கட்டடம் ஒன்றில் இருந்து பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினர் குண்டை கண்டெடுத்தனர்.

இக் கைக்குண்டு ஒரு பையில் சுற்றிவைத்திருக்கக் (10ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை மதிச்செல்வன் (தினேஸ்)

யாழ்: மாவட்டத்தில் கடந்த 29ஆம் திகதி சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை மதிச்செல்வன்/ தினேஸ் (பொன்னுத்துரை (10ஆம் பக்கம் பார்க்க)

## அதிகரித்த விலையில் செக். டாங்கி கொள்வனவு

(கொழும்பு)

செக்கோசெலவாக்கியா யுத்த 'டாங்கிகள்' கொள்விலையில் அதன் உண்மையான விலையைவிட சுமார் 150 வீதம் அதிக விலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

செக்கோசெலவாக்கியா அரசாங்கத்துடன் சிறிலங்கா அரசாங்கம் யுத்த டாங்கிகளை கொள்வனவு செய்யக் கூடிய நேரடியான வாய்ப்பு இருந்தபோதும் யுத்த டாங்கிகளை ஏன் சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறான அதிகரித்த விலையில் கொள்வனவு செய்ய வேண்டும் என அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் யுத்த டாங்கிகளை இராணுவத்தினருக்கு வழங்குவரான ரஜ்ஜீத் ஜயறேத்தி முன்னாள் கடற்படை உயர் அதிகாரியின் மனைவியின் சகோதரராவார். இவர் இராணுவத்தினருக்கு தொடர்ந்து ஆயுதசப்பிளை செய்யும் பிரிட்டன் ஆயுத உற்பத்தி நிறுவனம் ஒன்றில் இலங்கை பிரதிநிதியாகசெயல்படுபவர். இவரின் சகோதரர் ஒருவர் இராணுவ பிரிகேடியர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சிப் பகுதியில் மெதடிஸ்த திருச்சபையினர்

(யாழ்ப்பாணம்)

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ள மெதடிஸ்த திருச்சபைக் குழுவினர் நேற்று வடமராட்சியில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர்.

இன்று காலை குழுவினர் யாழ்ப்பாண நகரத்தை வந்தடைவர். குழுவினர் இங்கு தங்கியிருக்கும் சமயம் விடுதலைப் புலிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவர். அண்மையில் சிறிலங்கா விமானப் படையின் தாக்குதலால் சேதமடைந்த புனித. யாகப்பர் தேவாலயம், குருநகர்ப் பகுதி வீடுகள் மற்றும் இராணுவத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பல இடங்களையும் பார்வையிட உள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர். வரும் எட்டாம்திகதி இக் குழுவினர் கொழும்பு திரும்ப உள்ளனர்.

## தப்பி ஓடிய படையினரை பிடிப்பதற்கு புதிய திட்டம்

இராணுவ அதிகாரி கூறுகிறார்

(கொழும்பு)

வடபகுதிமுகாம்களிலிருந்து தப்பிஓடிய பத்தாயிரத்திற்கு மேற்பட்ட படையினரைத் தேடிக் கண்டுபிடிப்பதனைத் துரிதப்படுத்தப் போவதாகவும் அதுவே தம் முன் உள்ள முக்கியபணி எனவும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களைத் தேடிக் கண்டுபிடித்து கைதுசெய்வது தொடர்பாக விரிவான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. தற்போது கிடைத்துள்ள புள்ளிவிபரங்களின்படி பத்தாயிரத்திற்கு மேற்பட்ட படையினரை இவ்வாறு தேடிப் பிடிக்கவேண்டியுள்ளது.

இதேவேளை தப்பியோடுபவர்கள் பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுவருவதாக பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. இவர்கள் அரசியல்வாதிகளுடன் இணைந்து தமது செல்வாக்கின்மூலம் வேறுபல தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர்,

மேலும் சுயவிருப்பின் (10ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வெற்று சப்புப்பெட்டிகள் நீளம்- 1அடி 10அங், அகலம் 1 அடி .உயரம் -8½'', நீளம் 2 அடி, அகலம் -1அடி 3'', உயரம் 7½'' அளவுள்ளவை விற்பனைக்குள்ளது. தொடர்பு - ''மில்க்வைற்'' (சி-8509)

### தவறிவிட்டது

02-02-94 மாலை 5மணிக்கும் 7மணிக்கும் இடையில் யாழ்நகரில் (C G 125 மோட்டார் சைக்கிளுக்குரிய இடது பக்கபற்றறி கவர் (சிவப்புநிறம்)காணாமற்போயுள்ளது கண்டெடுத்தவர்கள் இல 40, பிறவுண் வீதியில் ஒப்படைத்து தகுந்த சன்மானத்தை பெற்றுகொள்ளலாம். சு. சோமசுந்தரம் 40, பிறவுண் வீதி யாழ்ப்பாணம். (7409)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை, 6வது மைல்கல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி, (7380)

### தேவை

மரக்கடைச்சல் வேலையில் திறமையும் அனுபவமுமுள்ளவர்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். யுனிரெக் பொறியியல் நிறுவனம், வெலிங்டன் சந்தி, யாழ்நகர். (7407)

### தாமரைச்செல்வி எழுதிய நாவல்கள்

தாகம், விண்ணில் அல்ல விடிவெள்ளி படிக்கத் தவறாதீர்கள் தாமரைச்செல்வி கடந்த பதினைந்து ஆண்டுகளில் வாசகர்கள் நெஞ்சத்தில் தனியானதோர் இடம் பிடித்துவிட்டவர். கதையைச் சொல்வதில் தனிநடை, திறமை. புதுமை: (7275)

### கோல்டன் கொமட் கோழிகுஞ்சுகள் விற்பனை

CHRISTOMBU FARMGOLDEN COMET,PULLETS, COCARELS கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு' 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (7414)

### மூன்றாமிடம்

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தால் அகில இலங்கை ரீதியாக பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட ஆங்கில மொழியிலான விஞ்ஞானக் கட்டுரைப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவனான செல்வன் தி. திவாகரன் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (09)

### சிறுவர்க்கான வரதர் கதை மலர்கள்

1. அவன் பெரியவன் - அநு வை. நாகராஜன்
2. இராமன் கதை - 'சம்பந்தன்'
3. போக்கிரி முயலாரின் சாகசங்கள் - 'சொக்கன்'
4. வேப்ப மரத்தடிப்பேய் - சி. சிவதாசன்

சிறுவர்கள் விரும்பிப் படிக்கக் கூடிய சுவையான கதைகள் ஒவ்வொன்றும் விலை ரூபா 12/-

(7393)

---

யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

இன்று 04-02-94 வெள்ளிக்கிழமை பிறபகல் 3-00 மணிக்கு யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில் சகலதுறை வர்த்தகர்களுக்கும் ஓர் முக்கிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வார்கள். இக் கூட்டத்தில் வர்த்தகர்களின் மிக முக்கியமான விடயங்கள் பல கலந்துரையாட வேண்டி இருப்பதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகலதுறை வர்த்தகப் பெருமக்களும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

யாழ் வர்த்தகர்சங்கம்

(சி-8507)

---

## 31-ம் நாளில்...



மண்ணில் 05-0?-1946

விண்ணில் 05-01-1994

### அமரர் சிற்றம்பலம் பிறைசூடி

(இ. போ. ச. சாரதி - வவுனியா)
மீசாலை கிழக்கு - மீசாலை

துணிவாகி நின்ற எம் தூண் சரிந்ததால்
துயரத்தில் நாம் மூழ்கித் தத்தளித்தோம்
உம் இழப்பை நிரபப முடியாமல்
நித்தலுமாய் கலங்கி நிற்கிறோம் ஐயா

இன்று நடைபெறும் சபிண்டீகரண கிருத்தியங்களில் நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

மீசாலை கிழக்கு
(7410) குடும்பத்தினர்

---

## 1-ம் வருட நினைவஞ்சலி



### கடற்புலி கப்டன் றொசான்

(இரத்தினசிங்கம் அருணராசா)

பிறப்பு 10.02.1975 — வீரச்சாவு 16.01.1993

திதி: 04.02.1994

செங்குருதியை தேச விடுதலைக்காய் - மையாக்கினீர்
தமிழீழ விடுதலைக்காய் இன்னுயிரை- அர்ப்பணித்தீர்
வங்கக் கடலினிலே காவியம் - படைத்தீர்
மானம் காத்த மறவர் படையினில் உம்மை
- அர்ப்பணித்தீர்
உம்மை அனுதினமும் போற்றியே
நினைவிற் கொள்ளும்

அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பெற்றோர்,
சகோதரர்கள்

❁ இன்று எமதில்லத்தில் இடம்பெறும் திதிக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் நண்பர்களையும் அழைக்கின்றோம். (சி-8506)

---

## ஜனவரி மாத அதிர்ஷ்டசாலிகள்

1. 1-ம் பரிசு - ரூபா 2500/-
   சி. இல 3422 திரு. கு. கணேசமூர்த்தி கரணவாய் தெற்கு, கரவெட்டி.
2. 2-ம் பரிசு - ரூபா 1500/-
   சி. இல: 3401 திருமதி கி. தவராசா 34, துரைராசா வீதி, யாழ்ப்பாணம்.
3. 3-ம் பரிசு - ரூபா 1000 -
   சி. இல: 4008 திருமறை இல்லம் 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

நீங்களும் அதிர்ஷ்டசாலிகளாக எழிலகத்தில் கொள்வனவு செய்யுங்கள்

# எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- 05-2-94 சனிக்கிழமை இருப்பு எடுப்பதால் வியாபாரம் நடைபெறமாட்டாது

(கி-8508)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1994-02-04

1957ஆம் ஆண்டு தேதினத்தில் சிறிலங்கா சுதந்திரதினத்தைப் பகிஷ்கரித்துத் தமிழீழம் எங்கும் துக்க நாளாக அநுட்டிக்கப்பட்டபோது, திருகோணமலைச் சந்தைக் கட்டிடத்தில் கறுப்புக்கொடி ஏற்றி வைக்கையில் சிங்கள இனவெறியர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் உயிர்நீத்த,

'மான வீரன்—திருமலைத்தியாகி'

**நடராசன்** (திருகோணமலை)

1985ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

❁ **கந்தசாமி துரைநாயகம்** (எல். பி-03, மூதூர் - திருமலை)

1986ஆம் ஆண்டு அம்பாறை அக்கரைப்பற்றுப் பகுதியிற்சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**பரிசுத்தம்** (கணபதிப்பிள்ளை ஆத்மராஜா-கல்முனை-03-அம்பாறை)

1988ஆம் ஆண்டு திருமலை -- மூதூர்ப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர்காவற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

❁ **வரதன்** (சீனித்தம்பி வரதராசன்-மூதூர் - திருமலை)

கிளிநொச்சியில்தேசவிரோதக்குழுவினரால்கடத்திச் செல்லப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட,

❁ **ஜோன்சன்** (எஸ். மாகிலாமணி-முரசுமோட்டை பரந்தன்-கிளி)

❁ **சுதர்சன்** (--சுபரூபன் - கிளிநொச்சி)

❁ **விக்ரர்** (வீ. தவநாயகம்-கிளிநொச்சி)

மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்,

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட,

நாட்டுப்பற்றாளரான,

**சின்னத்தம்பி நவீந்திரன்-ராகவன்** (செம்பியன்பற்று, வடமராட்சிகிழக்கு-யாழ்)

மற்றும் ஒரு தமிழ்ப்பொதுமகன்.

யாழ் - புன்னாலைக்கட்டுவன், ஈவினைப்பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு மட்டு- மகிழவெட்டுவான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**அருள்ராஜ்** (கெக்டர் வில்பிரற் பெயிலதிஸ்-எல்டப் குறூப் - பசறை)

மட்டு- தாம்பன்கேணிப் பகுதியில் வயலிற்குச் சென்று கொண்டிருக்கையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழ்விவசாயிகள்;

கிளி- உருத்திரபுரம், கூழாவடிப் பாலத்தடியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட இதே மாவட்டத்தைச் சேர்ந்த 10 தமிழர்கள் மற்றும் யாழ்- மல்லாகம், ஆலை வீதியைச் சேர்ந்த தமிழ் விவசாயி;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❁ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்;

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8504)

# ஒரு சிங்களப் பத்திரிகையின் பார்வையில் கொழும்பில் தமிழர் கைதுகள்

சென்ற பத்துவருடகாலத்தில் இலங்கையில் தமிழ்இனத்தினர் அனுபவிக்கின்ற இன்னல்கள் எத்தனை? இந்நாட்டு அரசாங்கத்தை உலுக்கிய சில பிரச்சினைகளுக்காக அப்பாவித் தமிழ் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள். இவ்வாறு இவர்கள் அனுபவித்து வரும் இன்னல்களின் உச்சகட்ட ஆண்டாக 1993 அமைந்தது எனக்கொள்ளலாம்.

இந்த ஆண்டில் இந்த அரசாங்கம் அப்பாவித் தமிழ் மக்கள் வாழும் இடங்கள் மீது குண்டுவீசி இனவாதப் பிரசாரம் செய்து அரசியல் லாபம் பெற்றுக்கொண்டனர். தமிழ் இளைஞர்கள் பலரைக்கடத்தியும் பலரைக் கைது செய்தும் உள்ளதுடன் பலர் காணாமல் போயுள்ளதாகவும் மனிதநேய ஸ்தாபனங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதனை இவ் அரசாங்கம் இனவாத நோக்கோடு செய்து முடித்துள்ளது

தமிழ் இளைஞர்கள் நாடு முழுவதும் விசேடமாக கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளில் தங்கியிருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள் இனம்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட பலர் இன்று வரை கண்டுபிடிக்கப் படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு வயதுபால்வேறுபாடுகள் இன்றி பலதமிழர்கள் கைதுசெய்யப்படும் நிலைக்கு உள்ளாகினர். 'தமிழன்' என்ற முத்திரை குத்தப்பட்டு இன்னல்களை அனுபவித்தார்கள். இதனால் தமிழர்கள் பொதுவாகஉளரீதியாக பாதிக்கப்பட்ட நிலையில் எங்கு? எப்போது கைதுசெய்யப்படுவோம்? என்ன நிகழும்? என தெரியாத இக்கட்டான ஒரு நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. எங்கும் அவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாதநிலை.

தமிழர்கள் கைதானது மிகவும் வேடிக்கையான முறையில் நடைபெறுகிறது. இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் மீது பின்னர் ஒரு தெளிவற்ற குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறதுஇதன்மூலம் சிலரை அடையாளம் காண முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான கைதுகளையிட்டு சிங்கள இனவாதக் கட்சிகள் கவலைப்படுவதாக இல்லை. இக்கைதுகள் மூலம் சிங்கள மக்களின் பௌத்த சிங்கள தலைமைத்துவத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் ''பயங்கர வாதிகள்'' என்ற போர்வையில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம்ஈழப் போரினால் 1990|91 நிதியாண்டில் 1000 கோடி ரூபாவாகவிருந்த பாதுகாப்புச் செலவினம் 1991|92 இல் 1500 கோடி ரூபாவாகவும் 1992 | 93 இல் 1800 கோடி ரூபாவாகவும் உயர்ந்தது.

இதேவேளை இவ் யுத்தத்தினால் 5000 க்கு மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். 8500க்கு மேற்பட்டோர் அங்கவீனமடைந்து யுத்தத்திற்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர். உளரீதியாக பாதிப்படைந்த8000க்கு மேற்பட்ட படையினர் தப்பி ஓடியுள்ளனர். இன்னும் பலர் யுத்தத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் 20000 க்கு மேற்பட்ட படையினர் -அதாவது சிறிலங்காப் படையினரில் ஐந்திலொரு பங்கினர் யுத்தகளத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட்டுள்ளனர் என நாம் கருத முடியும்.

இவ்வாறான இழப்புக்களிலிருந்து சிங்கள மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும் அதனை மறைக்கவும், பல முறை பாரிய யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டும் அவை ஒவ்வொன்றும் தோல்வியடைய அப்பாவித்தமிழ் பொதுமக்கள்மீது சிறிலங்கா அரசு பழி தீர்த்துக் கொண்டது.

1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிளாலி கடல் நீரேரியில் படகுப் போக்குவரத்தில் ஈடுபட்ட தமிழர்களை வெட்டியும், குத்தியும், சுட்டும் இராணுவ-கடற்படை அணியினர் கொன்றனர். மைலந்தனைப் படுகொலைகளை அடுத்து உச்சகட்டமாக இப் படுகொலைகள் சர்வதேச ரீதியில் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை இவற்றை காரணம் காட்டி உதவிகளைக் குறைக்க முயன்றன. இவ்வாறான நடவடிக்கைகள் தொடருமானால் குறிப்பிட்ட சில மாதங்களில் அரசாங்கத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்படும் என அச்சுறுத்தின.

இந்நிலையிலும், தென்னிலங்கை அரசியலை மையமாகக்கொண்ட பிரதேசசபை, மாகாணசபை தேர்தல்களில் ஈடுபட வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இக்காலத்தில் தமிழருக்கு எதிரான செயல்களை அரசாங்கம் சிறிதளவு 'தணித்துக் கொண்டது. உள்ளூராட்சித்தேர்தல், மாகாணசபைத் தேர்தல் என்பனவற்றை அடுத்து ஐ.தே.க. தென்னிலங்கையில் சிங்களவர் மத்தியிலிருந்து பிரச்சினைகளை எதிர் நோக்கியது.

முதன்மையாக பிரேமதாசா விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை தொடர்பான பிரச்சினை எதிர்பாராத விதத்தில் பெரும்புயலை ஏற்படுத்தியது. மேலும் 60,000 இளைஞர்கள்காணாமல் போனமை, கைதுசெய்யப்பட்டவர்களில் 22,250 பேர் விடுதலை செய்யப்படாமை போன்றவை சிங்களமக்களை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது கோபம் கொள்ள வைத்தது.

இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.க நடந்து கொண்ட விதமும் குறிப்பாக ஜ.ஐ.தே.மு. தலைவர் அத்துலத்முதலி கொல்லப்பட்டமை என்பன 'இதனைச் செய்தது பிரேமதாசாதான்' என்ற சந்தேகத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இதனை விடுதலைப் புலிகள் தான் செய்தார்கள்என்பதை சிங்கள மக்களுக்குப் புரிய வைக்க பிரேமதாசா அரசாங்கம் படாதபாடு படவேண்டியிருந்தது. மாகாண சபை அத்துலத்முதலி கொலையை புலிகளே செய்தனர் என நிருபிக்கவும் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட அவநம்பிக்கையைப்போக்கவும் பெருமளவில் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் அத்துலத் முதலி கொலை செய்யப் பட்டு எட்டாம் நாள் சிறிலங்கா அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய தினமாகிய மே ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப் பட்டார். தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் மீண்டும் வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

தொடர்ந்து டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதிப் பதவி ஏற்றதும் பிரேமதாசா கொலையை அடுத்து பெருமளவு தமிழ் மக்கள் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் நிலவியது. ஆனால் மாகாண சபைத் தேர்தல் விரைவிலேயே எதிர்பார்க்கப்பட்டதால் தன்னை ஒரு அப்பாவி ஜனாதிபதியாகக் காட்டிக் கொள்வதற்காக பெருமளவு கைதுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

1993இல் கொழும்பில் கைதான தமிழர் தொகை

| மாதம் | தொகை சுமார் |
|---|---|
| ஜனவரி | 100 |
| பெப்ரவரி | 50 |
| மார்ச் | 35 |
| ஏப்பிரல் | 20 |
| மே | 525 |
| ஜூன் | 400 |
| ஜூலை | 150 |
| ஓகஸ்ட் | 35 |
| செப்டெம்பர் | 400 |
| ஒக்டோபர் | 800 |
| நவம்பர் | 850 |
| டிசெம்பர் | 600 |

மேமாதம் 17-ம் திகதி மாகாணசபைத்தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து தமிழர்களைக் கைது செய்வதற்காகவே புதிய சில அணிகள் உருவாக்கப்பட்டன. இதனை யடுத்து தமிழர்கள் கைதாவதும், சித்திரவதைக்கு உள்ளாவதும் உச்சக்கட்டத்தை அடைந்தது. மே மாதம் 28-ம் திகதி கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் 500 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

பின்னர், உலகவங்கியிடம் உதவிபெறச் சென்ற பிரதமர் ரணில் தலைமையிலான குழுவிற்கு பிரயோகிக்கப்பட்ட அழுத்தமும் ஜனாதிபதி - தொண்டமான் பேச்சுவார்த்தையும் தமிழ் இளைஞர்கள் தொடர்பான ஒரு ஒப்பந்தத்தைஏற்படுத்தியது ஜூன்10ம் திகதி கைதுசெய்தலின்போது கடைப்பிடிக்கவேண்டிய ஒரு ஒப்பந்தம்அமுலுக்கு வந்தது.

இதனையடுத்து தமிழர்களை பெருமளவில் கைது செய்ய முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து அடியாட்களைக் கொண்டும், 'பயங்கரவாதிகள்' என்ற பெயரிலும் கைதுகள் இடம் பெற்றன.

இவ்வேளையில் ஜூலை 25-ம் திகதி ஜனகபுர இராணுவமுகாம் மீது புலிகள் நடாத்திய தாக்குதல்களும் விடுதலைப் புலிகளிடம் அம்முகாமிலிருந்து பறிகொடுத்த ஆயுதங்களும் தென்பகுதி சிங்கள மக்களிடையே ஐ.தே-க. அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பை உருவாக்கியது. பம்பலப்பிட்டியில் ஆடிவேல் விழாவில் இடம்பெற்றகுண்டு வெடிப்பைக்கூட அரசாங்கம் புலிகளின் தலையில் சுமத்த முயன்றது.

இக்காலப்பகுதியில் முகத்துவாரப்பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் டயர் போட்டு எரிக்கப்பட்டார், மேலும் அப்பகுதியில் தற்கொலைப் படை அங்கி கண்டெடுக்கப் பட்டதையடுத்து கொழும்பில் பெருமளவு தேடுதல்கள் நடாத்தப்பட்டன. போக்குவரத்து வாகனங்கள் வீதி வீதியாக நிறுத்தப்பட்டு தமிழர்கள் இறக்கப்பட்டு பலத்தசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது சிங்கள மக்கள் சோதனையிடப்படவில்லை.

பின்னர் செப்டெம்பர் 28 ஆம் திகதிதொடங்கிய 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை மூலம் கிளாலியை கைப்பற்ற முயன்று பல இழப்புகளைச் சந்தித்தது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் முடிவு அரசாங்கத்திற்கு பெரும் அவமானத்தையும் மக்களிடையே எதிர்ப்பையும் கொடுத்தது. இதனைத் தணிக்கவிடுதலைப்புலிகள் கொழும்பில் நடமாடுவதாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு 'பயங்கரவாதிகள்' என்ற பெயரில் தமிழ்மக்கள் கைது செய்யப்பட்டனர்.

நவம்பர் 11இல் விடுதலைப் புலிகள் பூநகரியில் நடாத்திய தாக்குதலில் ஒரு கெரில்லா அணி 24 மணிநேரத்தில் இரு முகாம்களை தாக்கி அழித்து 800க்கு மேற்பட்ட படைகளைக்கொன்றமை, பலகோடி ரூபா ஆயுதங்களை எடுத்துச் சென்றமை அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையைச் சிதறடித்தது. சிங்களமக்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டு அரசின் மீது ஆத்திரம் கொண்டனர். இந்நிலையில் மீண்டும் தமிழர் தடுப்புமுகாம் கொண்டுசெல்லப்படும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் புலிகளுக்கு எதிராக போராடியே ஆக வேண்டும்என சில அமைப்புக்கள் வற்புறுத்தி வரும்வேளையில் சில நடுநிலை அமைப்புக்கள் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வெல்லுவது கடினமானதுஎனவும் யுத்தம்தொடர்ந்தால் அரசு பல இன்னல்களை எதிர்நோக்கவேண்டி வரும் எனவும் ஆலோசனை கூறியுள்ளன.

நன்றி: 'இறு'
மொழியாக்கம்:
**நிமல்ராஜ்**

# புலிகளின் நிர்வாகத்திலேயே மன்னாரின் பெரும்பாகம் உள்ளது

## அரசாங்கத்தின் கூற்று தவறானது

சிறிலங்கா இராணுவத்தில் தேடி அழித்தல் நடவடிக்கையின் பின் மன்னார் பாதுகாப்பான பிரதேசம் என்று கடந்த நவம்பரில் அறிவிக்கப்பட்டது. ஆனால் மன்னார் தீவு, வங்காலைமற்றும்நானாட்டான் உதவிஅரசாங்க அதிபர் பிரிவைத் தவிர ஏனைய பகுதிகள் புலிகளின் நிர்வாகத்தில் உள்ளது. இராணுவத்தின் நிர்வர்கத்தின் கீழ் உள்ள பகுதிகளைவிட மன்னாரில் பெரும் பகுதி புலிகளின் ஆட்சியில் உள்ளது - இவ்வாறு சாமிந்திரா பெர்டினன்டோ ஐலன்ட் பத்திரிகையில் எழுதியுள்ளார். இதனை மன்னாரில் உள்ள உயர் அதிகாரிகள் தன்னிடம் தனிப்பட்ட முறையில் கூறியதாக அவர் தெரிவிக்கிறார்.

மன்னார் அரச அதிபர் கே. கணேசனின் அலுவலகத்தில் மன்னாரில் சிவில் நிர்வாகத்தை மீளவும் அமுல்படுத்தல் தொடர்பான அமைச்சரவை உபகுழு மகாநாட்டில் செய்தி சேகரிக்க வந்த சாமிந்திரா பெர்டின்டோவிடமே இவ்வாறு கூறப்பட்டது.

அமைச்சர்கள்சிறிசேனகுரே பி. தயாரெட்ணா, பெஸ்ரஸ் பெரேரா உள்ளிடப் பன்னிரெண்டு அமைச்சர்களும் மற்றும் வடக்கு - கிழக்கு ஆளுநர் லயனல் பெர்னாண்டோ, மத்திய மாகாணசபை அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

1990 ஜூன் மாதத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களால் மன்னாரில் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. 30,000 குடும்பங்களில் 27,575குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்துள்ளன என்று அமைச்சரவை உப குழுவின் தலைவர் பி. தயாரெட்ணா தெரிவித்தார்.

மன்னார் மீன்பிடித் தொழில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அருட்திரு ஜே. பி. தேவராஜா பேசுகையில், மன்னார் மீனவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்ட பிறகு மீனவர்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்றார். மன்னார் மீனவர்கள் தொழிலின்றி வீட்டில் தங்கியிருக்க, இந்திய இழுவைப் படகுகள் மன்னாரக் கடலில் தங்குதடை எதுவுமின்றித் தொழில் செய்வதாக சில அதிகாரிகள் சுட்டிக்காட்டினார்கள்.

மன்னாரில் 4500 மீன்பிடிக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன இதில் 2500 குடும்பங்கள் பாதுகாப்புப் படையினர் பிடியிலுள்ள பகுதிகளில் வாழ்கின்றன. மிகுதிக் குடும்பங்கள் புலிகளின் நாட்டில் புகலிடம் தேடியுள்ளனர் என்று பெர்டினன்டோ எழுதியுள்ளார்.

1990 ஜூனில் தமது வதிவிடங்களை விட்டு வெளியேறிய 92,000 பேரில் சுமார் 15,000பேர் மீளக் குடியமர்ந்துள்ளனர் பாதுகாப்புக் காரணங்களுக்காக மிகுதிப் பேர் திரும்ப முடியாத நிலையில் உள்ளனர் என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டது.

பேசாலை, வங்காலை, பள்ளிமுனை மற்றும் தலைமன்னார் பியர் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் மக்களை மீளக் குடியமர்த்த முடி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நாளை இறப்போர்க்கு இன்று உணவு ஊட்டும் ஐ. நா.

பெல்கிரேட்டின் புறநகர்ப் பகுதிகளில் இது இப்போது சாதாரண நிகழ்ச்சி. ஏன் கெயிற்றி தீவின் சேரிப் புறங்களிலும் இது நடக்கின்றது. மலைபோல் குவிந்து கிடக்கும் குப்பை கூழங்களை கிண்டி உணவுப் பொருள் ஏதேனும் கிட்டாதா என கெயிற்றியின் சேரிப்புறப்பிள்ளைகள் திணறுகின்றனர். பெல்கிரேட்டிலோ உலோகப் பொருள்கள் போன்று ஏதேனும் விற்கக் கூடிய பொருள்களை கிளறி எடுத்துவிற்று தமது உணவுப்பங்கீட்டினைப் பெற பணமாக்க முயல்கின்றார்கள். இங்கு ஒரு துண்டு பாணுக்கு— தமது உணவுப் பங்கீட்டிற்கு மக்கள் ஆயிரக்கணக்கில் காத்து நிற்பது முன்எப்போதும் காண முடியாத காட்சி. முன்னாள் யூக்கோசிலேவியாவில் இப்போது மிஞ்சியிருக்கும் சேர்பியாவும், மொன்றிநீகிரோவும் பழைய கற்கால நிலைக்குள் தள்ளப்பட்டு விட்டதாக சிலர் கூறுகின்றனர். அண்மையில் சேர்பியா தனது மனநோயாளர் தங்கும் விடுதியொன்றில் தகுந்த உடையின்றி, உணவின்றி, தக்க மருந்துகளின்றி மிக மோசமான அருவருக்கத்தக்கநிலையில் காட்சியளிக்கும் மனநோயாளர் பற்றிய குறும் திரைப்படமொன்றைத் தயாரித்து மேற்கத்தைய மனிதாபிமான உதவி அமைப்புக்கட்கு அனுப்பிய சேர்பிய அரசின் நோக்கம் இதன் மூலம் தன் நாட்டின் மீது கடந்த மே மாதம் 1992ஆம் ஆண்டிலிருந்து விதிக்கப்பட்டிருக்கும் சர்வதேச பொருளாதாரத் தடையின் சிக்கலான விளைவுகளை வெளிப்படுத்தி உதவிகளைப் பெறுவதற்கேயாகும்.

முன்னரும் பொருளாதாரத் தடையென்பது ஒரு அரசியல் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட போதும் தற்போதைய புதிய ஒழுங்கில் மேற்குலகம் குறிப்பாக அமெரிக்கா இதனை ஒரு மாற்றுவழியாக இராணுவ ரீதியாக பலப் பிரயோகம் செய்வதால் ஏற்படும் எதிர் விளைவுகள் தரும் தொல்லைகளிலிருந்தும் அவமானத்திலிருந்தும் தப்புவதற்கு தக்ககருவியாக -பயன்படுத்திவருகின்றது. இப்போது தான் மட்டுமல்ல தன்னோடு சேர்த்து ஐநாவையும் தடைவிதிக்க தூண்டுவதால் நிலைமைகள் புதிய பரிமாணத்தை எடுத்துள்ளன: கியுபா, வடகொரியா, வியட்நாம் போன்றவற்றிற்கு மேல் பல்லாண்டு காலமாக அமெரிக்க பொருளாதாரத் தடை இருந்து வருகின்றது. ஐ. நாவுக்கு ஊடாக தற்போது ஈராக், கெயிற்றி, சேர்பியா, லிபியா மீது பல்வேறு வடிவங்களில் தடைகள் இப்போது நடைமுறையிலுள்ளன. ஆனால் இப்போது எழுந்துள்ள பெரிய கேள்வி என்னவென்றால் இத்தடைகள் விதித்த தன் நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா? இத்தடைகள் சாதாரண பொதுமக்களை மோசமாக தண்டிப்பது சரியா? என்கிற சிக்கல்கள் இப்போது ஆராயப்படுகின்றன: அண்மையில் அமெரிக்காவும் ஏனைய 12ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளும் இது பற்றிய மீளாய்வொன்றில் குறிப்பாக சேர்பிய, கெயிற்றி மக்கள் நிலைகுறித்து விரிவாக விவாதித்ததாக தெரியவந்துள்ளது.

ஐ: நா இதுவரை விதித்த தடைகளுக்குள்ளே சேர்பியா மேல் விதித்த தடைபோல் எதுவும் பாரியதாக வெற்றிகரமானதாகஅமையவில்லை என இப்போது கூறப்படுகின்றது. அதிநவீன தொழில்நுட்பங்களை, செய்மதிகளை பயன்படுத்தி நியூயோர்க்கில் இயங்கும் ஐ. நாவின் தடைகள் மேற்பார்வை குழுவிற்கு சேர்பியா நோக்கி டான்யூப் நதிக்கு ஊடாக வரும் எக்கப்பலையும், வீதியூடாக வரும் கனரக வாகனங்களை அதன் தொடங்குமிடங்களையும் உடனடியாக அறிய முடியும். இவை தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்க 26 நாடுகளோடு நேரடித் தொலைத்தொடர்புகள் உடனுக்குடன் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன: இதன் விளைவாலும் சேர்பியா நடத்தும் போராலும் இன்று தாழ் நிலையை அடைந்துள்ள சேர்பிய மக்கள் நிலையை அண்மையில் நியூஸ்வீக் டைம் சஞ்சிகைகள் புள்ளிவிபரங்களாக வெளியிட்டன: தடைகள் காரணமாக சேர்பியாவில் இப்போது பணவீக்கம் 25,000 வீதம்; நம்பமுடியாத அளவுக்கு நிலைமை உள்ளது. அங்கு புழக்கத்திலிருந்த டினார் (Dinar) நோட்டுக்கள் இப்போது வெறும் காகிதம்; மக்கள் வருமானம் சராசரி 500அமெரிக்க டொலரிலிருந்து 15அமெரிக்க டொலராக வீழ்ச்சி; வேலையற்றோர் இப்போது நாட்டின் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பகுதி. எனவே இப்போது ஐ. நா. ''தனது தடை சேர்பியாமீது உச்சஅளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது'' எனக் கூறுகின்றது.

இங்கேதான் ஒரு புதிய செய்தி வெளியாகின்றது. இவ்வாறு தடைவிதித்தும் ஐ. நாவின் குறிக்கோள்கள் நிறைவேறினவா? தடைவிதித்ததற்கு ஐ. நா கூறும் 2 காரணங்கள்; (1) பொசுனியாப் பகுதியில் தடையற்ற உணவு விநியோகப் பணிகளை உறுதிப்படுத்தல் (2) பொசுனியாவில் சேர்பியாவின் இனச் சுத்திகரிப்பு வன்முறையை நிறுத்தி தீர்வொன்றுக்கு தள்ளுதல் என்பன. எனவே இந் நோக்கங்களை அடைய தடைகள் சேர்பிய மக்கட்கு அழுத்தம் கொடுக்க அவர்கள் தமதுஅரசுக்கு அழுத்தம் கொடுப்பர் அல்லது தூக்கிஎறிவர்; பொசுனிய சேர்பியருக்கு தமது அரசு உதவுவதை தடுப்பர் என ஐ. நா நம்பியது. ஆனால் நடந்ததோவேறு ஐ. நாகனவிலும் எதிர்பாராத காரியங்களே இன்று அங்கு நடைபெறுகின்றன. இது வரலாறு.

மிக அண்மையிலே சேர்பியாவில் பொதுத்தேர்தல் நடந்தது தேர்தல் முடிவுகள் சுட்டப் போகும் செய்திக்காக உலகமே காத்துக் கிடந்தது. இறுதியில் மிஞ்சியது பெரும் ஏமாற்றம். தோற்றுப் போவார் என ஐ. நா. எதிர்பார்த்த சேர்பிய சனாதிபதி சிலோபடான் மிலோசவிக் (Slobodan Milosevic) இன் கட்சிக்கு 101 இருந்து 123 ஆசனங்கள் அதிகரித்து கிடைத்தது அவரது சேர்பிய தீவிர தேசியவாதம் அவரைக் காப்பாற்றி விட்டது. அங்கு எதிர்க்கட்சிகள் உட்பட எல்லாமே இதனை வலியுறுத்தியே நின்றன. மாற்றுக்கருத்தே இவ்விடயத்தில் இல்லை. உண்மையிலே நடந்தது ஒரு ஆய்வுக்குரிய செய்தி என சமூகவியலாளரும் உளவியலாளரும் இப்போது அதிசயப்படுகின்றனர் தமது துயர்கட்கு எல்லாம் காரணம் சேர்பிய அரசின் பரந்தசேர்பியா(பொசுனியா, குரோசியா சேர்பிய பகுதிகள் உள்ளடக்கிய) என்கிற தீவிர பேரினவாதம் என்பதையோ அல்லது பொசுனிய முசுலிம்கட்கு உரித்தானவற்றை விட்டுக் கொடுக்காமையோ என்பதை ஏற்காமல் - மேற்குலகின் தடையே என மேற்குலகை தமது எதிரியாக திட்டித் தீர்க்கும் மனப்பாங்கு எப்படி அங்கு வளர்ந்தது? ''விசித்திரமுரண்பாடு இது. தடைகளும் சருவதேச அரசியல் அழுத்தங்களும் மிலோசவிச்சின் வெற்றிக்குமுக்கியகாரணமாகிவிட்டன ஏனென்றால் சேர்பியமக்களோ பொருளாதாரத்தடை என்பது தமது தேசிய கௌரவத்திற்கு இழுக்காக தமது தன்மானத்திற்கு அவமதிப்பாக உணர்ந்து கிளர்ந்து தமது தலைவர்பால் முற்றாகச்சாய்ந்தனர்''

இப்போது சேர்பியாவில் தாம் சேர்பியராக இருப்பதற்காக பெருமைப்படுவதாககூறுவோர் தொகை அதிகம். டான்யூப் நதிக்கூடாக பெற்றோல் கடத்தி வருவது பெரும் வீரதீர தேசப்பற்றுச்செயலாகஅங்கு போற்றப்படுகின்றது. ஐ நா. என்னசெய்வதெனஇப்போது மீண்டும் மீளாய்வுகள் செய்ய நேரிட்டுவிட்டது.

கெயிற்றிதீவிலும் ஐ. நா. வின் தடை உள்ளபோதும் அதன் கதை வேறுபட்டது. அங்குள்ள இராணுவ அரசு மக்கள் ஆதரவினைப் பெறாதது மக்களால் மிக விரும்பி தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி அரிஸ்டிட்டை பதவிக்கு வரவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கும். அரசு ஐ.நாவால் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு ஒன்றை கடைசி நிமிடத்தில் நிராகரித்த பின் எரிபொருள் உட்பட சில முக்கிய பொருட்கள் கெயிற்றிக்கு செல்வது இப்போது தடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் இத்தடையால் ஏற்கெனவே பெரும் வறுமையாலும் கொடும் அடக்குமுறையாலும் வாடும் ஏழை மக்களே இராணுவ அரசை விட மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் கார்வேட் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி வழமையான இறப்புக்களைவிட 1000 மேலதிகமான சிசுமரணங்கள் இப்போது நிகழ்வதாக தெரியவந்துள்ளது. எவரும் கெயிற்றி மக்கள் கொடுக்கும் இவ்விலையை நியாயப்படுத்த முடியாது என இவ்வறிக்கை கூறுகின்றது மொத்த சனத்தொகையிலே 10 வீதம் அதாவது ஏறத்தாழ 7 இலட்சம் பேர் மனிதாபிமான அமைப்புக்கள் வழங்கும் உணவிலேயே தங்கியுள்ளனர். சிறு குழந்தைகள் நிலை தாங்க முடியாததாக உள்ளது. இம்மக்களால் எவ்வாறு தம்மை ஒடுக்கும் இராணுவ அரசை அகற்ற முடியும். இவ்வளவு காலமும் இத்தகையவல்லாண்மை கட்குவழிவகுத்த அமெரிக்கா இப்போது ஒதுக்கி மாற்று வழிகளைப் பிரயோகிக்கும் போது அன்றும் சரி இன்றும் சரி பாதிக்கப்பட்டது, பாதிக்கப்படுவது ஏழை மக்களாகி விட்டது. 1991ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இராணுவச் சதிப்புரட்சியே இம் மக்களின் இன்றைய நிலைக்குக் காரணமானபோதும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் போது அரசியல் மனிதாபிமான இலக்குகளிடையே சமநிலை காணும் வகையில் எவ்வித பொறி முறைகளும் இல்லையென்றே ஆய்வாளர் கூறுகின்றனர். எனவே தடைகள் விதிக்கப்பட்டபின் இப்போது நிலைமை என்னவென்றால் கெயிற்றிய இராணுவ அரசோ அரிய்யீட்டை வரவிடாமல் தடுப்பதோடு அல்லாமல் மேலும் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது: இதன் பயனால் நீதி அமைச்சர் அங்கு கொல்லப்பட்டார். 2 இலட்சம் மக்கள் தலைநகரிலிருந்து விரட்டப்பட்டனர். இப்போது கிளிண்டனுக்குக் கெயிற்றிய இராணுவம் சவால் விடுகின்றது:

இவை ஒரு பக்கக் கதை; இன்னொரு பக்கத்தில் தனது மேலாதிக்கப் போக்கிற்கு வழிவிடாமல் தடைபோடும் நாடுகட்கு எதிராக வர்த்தக தடைகள் விதித்தல் - உதவிகளை நிறுத்தல் என அச்சுறுத்திவரும் அமெரிக்க கொள்கையும் வெற்றியடையவில்லை: சிரியாவோ, சூடானோ, ஈரானோ, வடகொரியாவோ இதனால்அழிந்துவிடவில்லை; அதுபோலவே கியூபாவிற்கு எதிரான 35வருட காலத் தடை மேலும் இறுக்கப்பட்ட இந் நிலையிலும் காஸ்ரோவை சரணாகதி அடையச் செய்ய முடியவில்லை. அண்மையில் கியூபாவிற்கு எதிரான அமெரிக்கத் தடை பற்றி விவாதித்த கியூபா பற்றிய அரசியல் அறிஞர்கள் காஸ்ரோவின் பிடி மேலும் இறுகவே தடைகள் வழிவகுத்தன என்றும், பனிப்போர் முடிவடைந்த நிலையில் கியூபாவே சந்தைப் பொருளாதார முறையை நோக்கி மெல்ல நகரும் நிலை தோன்றும் நிலையில் தடைகள் அவசியமற்றவை என்றும் கூறினர். எனவே கியூபாவிற்கு எதிரான தடைகள் சருவதேச சட்டங்கட்கு முரணானது என்று அண்மையில் ஐ. நாவின் பொதுச்சபையே 59 வாக்குகள்பெற்று (3வாக்குகள் எதிர்ப்பாக மட்டும்)தீர்மானம் நிறைவேற்றியது.

இனிவரும் காலத்தில் பொருளாதார மேம்பாடு என்பதே நாடுகளைப் பெரிதும் பாதிக்கின்ற காரணியாகப் போவதால் தடை விதிக்கப்படும் நாட்டோடு தொடர்புகளை வைத்திருந்த அயல் நாடுகள் தமக்கேன் தண்டனை என எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றனர். ஐ. நாவின் தடையை ஐ: நாவின் உறுப்பினர்களான இவர்கள்இரகசியமாக மீறுவது வழமையாகி விட்டது. சேர்பியாவிற்கு அருகில் டான்யூப் நதிக்கரை நாடுகளான கங்கேரி, பல்கேரியா, ருமேனியா, கெயிற்றிதீவிற்கு அருகிலுள்ள டொமினிக்கன் குடியரசு இதற்கு உதாரணம்: இப்போது கியூபாவில் கூட மெக்சிக்கோ, கனடா முதலீடுகளை செய்ய முன்வந்துள்ளன. ஈராக்கிற்கு அருகில் ஜோர்தான் இவ்வகையில் வளைகுடாப் போரின் பின் பாதிக்கப்பட்டது முன்னர் தெரிந்ததே.

எனவே இப்பொது இலக்கு மாறி தடைகள் மக்களைத் தாக்குவதால் ஏற்படும் சிக்கல்கள், தமக்கு ஏன் தண்டனை என்கிற அயல் நாடுகளின் பெருமதியான கேள்வி ஏற்படுத்தும் சிக்கல் இவற்றிற்கிடையே பொருளாதாரத் தடையை நிறுத்தி விட்டால் வேறு வழி என்னவென்று ஐ: நா: அல்லாடுகின்றது.

ஆனால் பொசுனியாவில் நீதி நிலவ வேண்டுமானால் தமது இருப்பைக் காப்பாற்றப் போராடும் பொசுனிய முசுலிம்கட்கு ஆயுதங்கள் கிடைப்பதற்கு ஐ. நா. ஏன் தடை விதிக்கின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது: தடை விதித்தும், அமைதிப்படை அனுப்பியும் மாற்றம் ஏற்படாத நிலையில் பொசுனியாவில் அட்டூழியங்கள் புரிவோரை முறியடிக்க முடியாதநிலையில் போராடுபவர்க்கு உதவுவது ஒன்றே ஐ: நாவுக்கு உள்ள இறுதி வழியல்லவா. ஆனால் இதை ஏற்றுக் கொள்ள விரும்பாமல் சேர்பிய நிலைகள் மேலே விமானத் தாக்குதல்கள் நடத்துவது பற்றி கடந்த 6மாத காலமாக ஐ: நாவும் நேட்டோ நாடுகளும் விவாதிக்கின்றனர்.

இந்நிலை நீடித்தால் நாளை இறப்போர்க்கு இன்று உணவு ஊட்டும் ஐ. நா- என்கிறபெயர் மட்டுமே மிஞ்சப் போகின்றது;

பாலகுமாரன்

1992 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து சேர்பியா மீது சருவதேச பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட போது சேர்பியா விரைவில் வழிக்கு வந்து விடும் என்று கருதப்பட்டது; ஆனால் நடந்ததோ எதிர் மாறானது. இப் பொருண்மியத் தடை என்பது தமது தேசிய கௌரவத்திற்கு தன்மானத்திற்கு பெரும் இழுக்காக சவாலாக சேர்பிய மக்கள் கருதி தமது ஆட்சியாளர்க்கு பெருத்த ஆதரவினை வழங்குகின்றனர். அதேசமயம் பொசுனியாவில் சேர்பியர் கொடுங்கோன்மைக்கு எதிராக போராடும் பொசுனியா முசுலிம் மக்கட்கு ஐ: நா ஆயுதங்கள் கிடைப்பதையும் தனது ஆயுதத்தடை மூலம் தடுத்து வருகின்றது. அழியும் மக்களை காப்பாற்ற முடியாமல் அழிவிலிருந்து தப்ப அவர்கள் போராடும் போது ஆயுதத் தடை விதித்து அவர்களை மேலும் அழியவே வழி வகுக்கும்; இந் நிலையை என்னவென்று சொல்வது என எவர்க்கும் தெரியவில்லை.

## கண்ணிலே புழு

ஒரிஸ்ஸா மாநிலத்தில் பெர்ஹாம்வூர் மருத்துவ மனைக்கு கண்ணில் கட்டி என்று ஒரு பெண் சென்றாள்: இடக்கண்ணின்கீழ் இமைக்குள்கட்டிபோல் பெரிதாகஇருந்தது. கண்டாக்டர் பரிசோதித்து அங்கிருந்து சுமார் 2மீற்றர் (6அடி) நீளம் உள்ள நாடாப்புழு ஒன்றை எடுத்தார் மருத்துவ வரலாற்றிலே இது புதுமை என்கிறார்கள்:

# பூநகரியில் புதுவீரம் படைத்த புரட்சிப் புயல்

இந்த போராட்டத்தில் இணையும்போதே இந்த மண்ணில் வாழும் எம் இனத்தின் உண்மையான வாழ்வுக்காக தமது உயிர்களை தியாகம் செய்வதை பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்பவர்கள் தான் விடுதலைப் போராளிகள். போராளிகளாகிய எமக்கு ஒன்றுமட்டும் தெரியும். இந்தமண்ணில் மக்களுக்காக மரணிக்கப் போகின்றவர்கள் என்றும் ஒரு சண்டைக்கு களம் நோக்கி நாம் செல்லும் போது இதில் வருபவர்களில் யாரோ வீரச்சாவை தழுவப் போகின்றோம். ஆனால் யார் என்பது தான் தெரியாது. ஒவ்வொரு போராளியும் மனத்துள் நினைப்பான். அது நானாகத்தான் இருக்க வேண்டும் என்று.

எமது விடுதலைப் போராட்டம் எமது போராளிகளின் உயிர்த் தியாகத்தாலும் அர்ப்பணிப்பாலும் வளர்க்கப்பட்டு வருகின்றது. எம்மோடு ஒன்றாக இணைந்து வாழ்ந்து எம் சக தோழர்களை சண்டை முடிந்து வரும் போது அவனது உயிர அற்ற உடலை தோளிலும் அவனது இலட்சியக் கனவை மனதிலும் சுமந்து கொண்டு வருவோம். இது எம் விடுதலைப் போராட்ட வரலாற்றில்வழமையான நிகழ்வுகள்தான். ஒரு சில போராளிகளின் வீரச்சாவு மிகவும் மனதை கசக்கிப் பிழிவது உண்டு அந்த வகையில் என்மனதை வாட்டிய இலட்சியத்தில் மேலும் உறுதி ஏற்றிய வீரச்சாவுகளில் கப்டன் தினேஸின் வீரச்சாவு செய்தியும் ஒன்றாகும். அந்தளவிற்குஇவனில் வீரமும், தியாக உணர்வும் விடுதலைப் பற்றும் ஆழ வேரூன்றிக் காணப்பட்டன.

தனது பயிற்சியை முடித்து வலிகாமக் கோட்டத்திலே பலாலி இராணுவ முகாமில் இருந்து வெளியேறும் இராணுவத்தினருடனான சண்டைகளில் பங்குகொண்டவன். எம் மக்கள் தனது அன்றாட வாழவுகளை நடாத்த காவல் அரண்களில் கண் விழித்துக் காவல் காத்தவன். காவல் அரண்களில் நிற்கும் போது கூட வேறுஇடங்களிலும் இராணுவம் வெளியேறும்போது தனது குழுவுடன் சென்று அங்கு வெளியேற முனையும் இராணுவத்தினரோடு சமராடியவன் இவனது சண்டைக் களங்கள் பல ஆனையிறவு வரலாற்று யுத்தம் (ஆ க. வெ) பலவேகய- 02 என இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை மணலாற்றில் நடந்த பல தாக்குதல் நிகழ்வுகளிலும் பங்கு கொண்டவன் இச்சண்டைகளில் எல்லாம் இவனிடம் இருந்த வீரமும், யுத்த தந்திரங்களும் இவனை ஒரு நம்பிக்கைக்குரிய போராளியாக மாற்றியது. இதனால் இவனிடம் பல போராளிகளை வழிநடத்தி சண்டைகளை வழிநடத்தும் ஆற்றலும் இருந்தது. இதனால் இவன் பெரிய ஒரு குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டான்.

பூநகரி இராணுவ கடற்படை கூட்டுத்தளம் மீது தாக்குதல்நடாத்த எம் தலைவர் தீர்மானித்தார். அதற்கான ஆயத்த வேலைகளுக்கான பணிப்புரைகள் எமக்கு வழங்கப்பட்டன. நாம் போராளிகளை ஒன்று திரட்டி சண்டைக்கான பயிற்சிகளில் ஈடுபட்டோம். இவன் ஒரு மினிமுகாமை கைப்பற்றும் குழுவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டான். ஒருநாள் இவன் கடலில் நீந்தும் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போது திருக்கைமீன் முள்ளு ஒன்று இவனின் காலில் குத்திவிட்டது இதனால் இவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தான். வைத்தியசாலையில் இருந்து கொண்டு ஒவ்வொரு நாளும் இவனை பார்வையிட நிற்கும் போராளிகளிடம் என்னை பயிற்சி எடுக்கும் இடத்திற்கு கொண்டு போய்விடுங்கோ. என்ர பெடியள் என்ன பாடோ தெரியாது (தனது குழு) எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று அடம்பிடிப்பான். இவனது தொல்லை தாங்க மாட்டாமல் வைத்தியரிடம் கேட்டால் வைத்தியர் இவரை இன்னும் ஒருகிழமை வரையில் வைத்தியசாலையில் இருக்க வேண்டும். விசம் என்னும் இருக்கு சிலபேர் இறந்து கூட இருக்கினம் விடவேண்டாம் என்று கூறுவார்கள். இப்படியே இரண்டொரு நாட்கள் கழிந்தன.

ஒருநாள் காலையில் ஒரு பொது மகனின் சைக்கிளில் வைத்தியசாலையில் எவருக்கும் சொல்லாமல் வந்துவிட்டான். பின் இவனை திருப்பி அனுப்பி வைத்தியசாலையில் பதிந்துவிட்டு வரும்படி அனுப்பி பதிந்துவிட்டு வந்து தனது இயலாத காலுடனும் தனது குழுவுடன் சேர்ந்து சண்டைக்கான பயிற்சியை எடுத்தான். எப்போது பார்த்தாலும் பயிற்சி இல்லாத நேரங்களில் தனது போராளிகளை ஒன்றாக வைத்து தனது முகாம் பற்றியும் பல சண்டை அனுபவங்கள் பற்றியும் பயிற்சியின் முக்கியம பற்றியும் கதைத்துக் கொண்டு இருப்பான் எம்மைக் கண்டால் கதை நின்றுவிடும். அதனால் இவனது குட்டிக் கதாப்பிரசங்கத்தை நாம் ஒளிந்து இருந்து கேட்போம். அந்த நேரங்களில் எல்லாம் இவனது கடமையில்- தனது இலக்கில்- கொள்கையில் எவ்வளவு உறுதியாக இருக்கின்றான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

இவ்வாறான ஒரு காலகட்டத்தில் தான் யாழ்தேவி என்ற பெரிய ஒரு படையெடுப்பு நடக்கிறது. இந்த சண்டையிலும் தனது குழுவை வழி நடாத்தி இலங்கை இராணுவத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் பெரிய ஒரு தோல்வியை- இழப்பை ஏற்படுத்திய வரலாற்றுச்சமரில் தனது கடமையை திறம்படச் செய்தவன், இந்த வெற்றியில் இவனுக்குப் பெரிய ஒரு பங்கு உண்டு. தனது குழுவில் பலரை இழந்துவிட்ட நிலையிலும் ஓர் இரு போராளிகளோடு நின்று இறுதி வரை களத்தில் நின்றுசமராடினான் தனது ஆயுதத்தின் ரவைகள் தீர்ந்ததும் வீரச்சாவு அடைந்த போராளியின் ஏ கே இலகு இயந்திரத் துப்பாக்கியுடன் நின்று எதிரி மீது தாக்குதல் தொடுத்து பலஎதிரிகளை எமது மண்ணில் சாய்த்தான்.



கப்டன்
ஈழமாறன்
(தினேஸ்)

இந்தச் சண்டையில் இவனது திறமையும் வீரத்தையும் கண்முன்னே காட்டியபோது இவன் நிச்சயமாக இவனுக்குக் கொடுக்கப்பட்ட மினி முகாமை (பூநகரியில் உள்ள முகாம்) கைப்பற்றுவான் என்ற அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை என் மனதில் இருந்தது. நம்பிக்கையின் நட்சத்திரமாக இவன் விளங்கினான். பூநகரிச் சண்டைக்கான நகர்வுகளுக்கான ஆயத்த வேலைகளைச் செய்யும் போது ஒவ்வொரு போராளியின் சகலஉடைமைகளையும் தானே பார்வையிட்டு ஒழுங்குபடுத்திச் சரிசெய்து கொண்டு இருந்தான். சூரியன் தன்னை மறைத்துக் கொள்கின்றது. இயற்கையும் எமக்கு பூ மழை தூவி வழியனுப்புகின்றது. அந்த மழையில் நனைந்தபடி இரவோடு இரவாக இராணுவ பிரதேசத்திற்குள்ளால் பல மணிநேர நடையின் பிற்பாடு எமககுரிய முகாமில் இருந்து 1 கி. மீ. தூரத்தில் நிற்கிறோம். வேறு ஓர் இடதில் சண்டை தொடங்கிவிட்டது. உடனடியாக எமது இலக்குகளை நோக்கிவேகமாக நகரத் தொடங்குகின்றோம். குழுக்கள் பிரிந்து செல்லும் இடத்தில் வைத்து அந்த அந்த இலக்குகளுக்கு குழுக்கள் பிரிந்து நகருகின்றன. இவைகள் அனைத்தும் ஒரு குறுகிய நிமிட நேரத்திற்குள் நடைபெறுகின்றன.

முன்னே சென்று கொண்டிருந்த தினேஸ்திரும்பி வந்துஎனது கையைப் பிடித்து சத்தியம் செய்கிறான். அவனது சத்தியவாக்கிற்குக்கட்டுப்பட்டு வோக்கியில் அவனை தொடர்பு கொண்டு நிலைமையை கேட்டபோது அவனிடம் இருந்து கடைசியாக கிடைத்த பதில் இன்னும் ஒரு நிமிடத்திற்குள் பிடித்து விட்டு உங்களுடன் கதைக்கிறேன் என்ற வசனம் மட்டுமே. பெரிய வெடியோசைகள். எங்கு திரும்பினாலும் ஒரே பரா வெளிச்சக்குண்டுகள் இராணுவத்தினரின் ரேசர் ரவைகள் தணல் தணலாகப் பறந்தன. ஒரு வாணவேடிக்கையே நடந்தது. பலமான துப்பாக்கிச் சண்டை ஒருவரை ஒருவர் எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வைத்து நடக்கிறது.

இவனை தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தொடர்பு கொள்கிறேன். தொடர்புஇல்லை சிறிதுநேரத்தில்இன்னுமொருபோராளி அறிவிக்கின்றான்முகாம். எமது கட்டுப்பாட்டில் வந்துவிட்டதையும் தினேஸ் வீரச்சாவு என்ற செய்தியும் வருகின்றது. இவனோடு சேர்ந்து இன்னும் பல போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொள்கின்றனர். இவன் கடைசியாக வோக்கியில் சொன்ன அந்த வசனம் இன்னும் என் இதயத்தில் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. பெரிய ஒரு வரலாற்றுச் சமரிலேஇந்த மக்களுக்காக தன்னை அழித்ததன் மூலம் இன்று இதே மக்களின் இதயங்களில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றான். இவன் எம் இனம் வாழும்வரை வாழப்போகின்றான். இவனது...... வீரச்சாவுஇவனதுபேச்சையும் மூச்சையும் நிறுத்திக்கொண்டதே தவிர எம் மனங்களில் மக்களின் மனங்களில் இலட்சியத்தை இன்னும் வீச்சாக்கியுள்ளது.

**வ. செல்வராசா**
யாழ். மாவட்டச் சிறப்புத் தளபதி


## பேராதனைப் பல்கலைக்கழக
(வெளிவாரிப் பட்டப்படிப்பு)
## கல்வியாண்டு 1994/95

பின்வரும் பட்டப்பாட நெறிகளுக்கான விண்ணப்பங்கள் பேராதனை பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளன.

- கலைமாணி (B.A.)
- விஞ்ஞானமாணி (B.Sc)

புள்ளிவிபரவியல் க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி. அத்துடன் மொத்தப் புள்ளியாக 180 பெற்றவர்கள் மட்டுமே கலைமாணி பட்டப்படிப்புக்கு பதிவுசெய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவர். ஏனையவற்றிற்கு மேற்குறிப்பிடப்பட்ட தகைமை இல்லை. அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்கட்கு
உதவிப்பதிவாளர்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் மாணவர்கள் 20-2-1994க்கு முன்னர் தங்களது அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். குறிப்பிடப்பட்ட திகதிக்குபின் வரும் விண்ணப்பங்கள் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ்நகரில் இதுவே."

(சி-8487)



## 25,000 தக்காளிக் கன்றுகள்
## முற்றிலும் இலவசம்

ஒவ்வொரு ஜாம் போத்தல் ஒப்படைக்கும் போதும் ஜாம் போத்தலுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் 5 தக்காளிக் கன்றுகளை முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். இச் சலுகை கன்றுகள் உள்ளவரை மட்டுமே.

TASTE LINE INDUSTRIES (PVT.) LTD.
14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(இ-8503)



## மதுரா பட்டு மகால்

- ஆதரவாளர்களின் ஆவல் அறிந்தசேவை!
- மங்கள வைபவங்களுக்கான பட்டுப் புடவைகள்!!
- இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத் துணிகள்!!!

மதுராவின் வாடிக்கையாளர் பரிசுத்திட்டம்.
1-ம் பரிசு தங்கப் பதக்கம்
2-ம் பரிசு ரூபா 5000/-
3-ம் பரிசு ரூபா 2500/-
பல ஆறுதல் பரிசில்கள்

மதுரா ஆதரவாளர்களின் சிட்டை இலக்கங்கள் அனைத்தும் பரிசுத்திட்டக் குலுக்கலில் 1994 சித்திரையில் சேர்த்துக்கொள்ளப்பட விருப்பதால் சிட்டைகளைப் பத்திரப்படுத்துங்கள்.

நன்றி:
(சி-8496) 75, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## 28 ஆண்டுகள் விடுமுறை கோராதவர்

சின்னஞ்சிறிய விஷயங்களுக்குக் கூட விடுமுறை கோருகின்ற இந்தகாலகட்டத்திலே ஒருவர் 28 ஆண்டுகள் விடுமுறை எடுக்கவில்லை.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த அட்டஸ் பகத்துர் என்பவர் 1964 ம் ஆண்டு வட இத்தாலியிலுள்ள நீதிமன்றம் ஒன்றில் எழுதுவினைஞராகச் சேர்ந்தார் இவர் அந்த நாள் தொட்டு இன்று வரை 28 ஆண்டுகளாக விடுமுறையினைக் கோரவில்லை இவரின் நடவடிக்கையினை அவதானித்த தொழிற்சங்கம், இதனை நீதிமன்றத்தின் கவனததுக்கு கொண்டுவந்தது இதனை ஒரு வழக்காக பிராந்திய மேன்முறையீட்டு நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட போது மொத்தம் 900 நாட்கள் சேர்ந்த லீவுகள் இருப்பது தெரிய வந்தது அதாவது ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகள் இவர் தொடர்ச்சியாக லீவில் செல்லக்கூடிய அளவுக்கு அவருக்கு லீவு சேர்ந்துள்ளது.

வழக்கினை விசாரித்த நீதிபதி லூக்காரஸ் கன்ராறா என்பவர் "இவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சிறிது காலமாவது விடுமுறையில் செல்லவேண்டும்" என்று தீர்ப்பு வழங்கினார்.

- க. சுதாகர்

## சிறுகதை

# கூண்டுக்கிளி

### மணலாறு விஜயன்

செல்லக்குட்டியண்ணன் ஆர்மோனியப் பெட்டிக்கு முன் அமர்ந்திருந்தார். இப்போதல்ல, எப்போதுமே அவர் இசையினையும், இசைக்கருவிகளையுமே காதலித்தார் இசையைப்பற்றி அவர்எதுவுமே படிக்கவில்லை. ஆனால் அனைத்து இசைக்கருவிகளையும் இனிமையோடு இசைக்கக் கூடிய வல்லமையை தமிழன்னை அவருக்குக் கொடுத்திருந்தாள். பதிலுக்கு அவருடைய பிள்ளைகளை தன் விடுதலைக்காக எடுத்துக் கொண்டாள்.

செல்லக்குட்டியண்ணனின் விரல்கள் சுருதியை வருடின. அவருடைய நினைவுகளோ தொலை தூரத்துக்குப் பறந்து சென்றது.

கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோயில். அதனருகே சிறிய மலைக் குன்று; குன்றின் சாரலில் வயல்வெளிகள்; வயல் வெளிகளின் நடுவே அமைந்திருந்த ஓலைக் குடிசை.

அழகான இடம்; சுகமான காற்று; ஆற்றுப்படுக்கையைத் தொட்டுத் தழுவி வரும் குளிர்காற்றையும் பொருட்படுத்தாது அந்தக் குடிசை கலகலப்பாக இருந்தது. வேறொன்றுமில்லை. அன்று தைப்பூசம். தைப்பூசம் வருடாவருடம் வருவது தானே அதற்காக இத்துணை மகிழ்ச்சியா?

வருடாவருடம் வரும் தைப்பூசத்தைவிட மூன்று ஆண்டுகளுக்குப் பின் மூத்த மகன் வீட்டுக்கு வந்திருந்தான், அவன் என்ன வெளிநாட்டிலிருந்தா வந்தான்? இல்லை. இந்த மண்ணின் விடுதலைக்காக களத்தில் நின்றான். மகனைக் கண்ட மகிழ்ச்சி ஒருபுறமும், தைப்பூசநாளில் அனைவரும் வீட்டில் நிற்கின்ற மகிழ்ச்சி ஒருபுறமுமாக இரட்டிப்பு மகிழ்ச்சி அங்கு நிலவியது.

செல்லக்குட்டியண்ணன் வயலுக்குச் சென்று புதிரெடுத்து வெள்ளைத்துணியால் சுற்றிக் கொண்டு வந்தார். வரும் வழியில் கொட்டுக் கிணத்தானுக்கும் ஒரு பிடி கதிர் வைத்து விட்டுத்தான் வந்தார்.

புதுப்பானையில் புதிர்ப் பொங்கல் நடந்தது. நான்கு பிள்ளைகளுமே அன்றுதான் வீட்டில் ஒன்றாக இருந்துபுதிர்ப்பொங்கல் உண்டனர். மனைவியுடன் பிள்ளைகளையும் சுற்றி இருத்திவிட்டு பொங்கல் சாதத்தை கவளமாக்கி கையில் கொடுத்தார் செல்லக்குட்டியண்ணன். அன்று அவருடைய மனம் அளவற்ற மகிழ்ச்சியிலிருந்தது. எல்லோரும் கூடி உண்டு மகிழ்ந்த பூசம் அதுதான். அதன் பின்னர் ஓராண்டில் மகனை மாவீரர் இல்லத்தில் மட்டுமே தரிசித்தார். மூத்த மகன் மட்டுமல்ல, இன்று இரண்டாவது மகனும் அங்குதான் துயில்கின்றான்.

'அப்பா, பள்ளிக்கூடம் விட்டு வரேக்க இந்தியனாமி வழியில மறிச்சு சப்பாத்துக் காலால அடிச்சுப் போட்டானப்பா! பள்ளிக்கூடத்துக்குப் போறதுக்கும், வாறதுக்குங் கூட சுதந்திர மில்லாமல் செய்து போட்டாங்களப்பா'' என்று அழுதழுது கொண்டே வந்து சொன்னான் இரண்டாவது மகன். அன்றிலிருந்துதான் அவர் இரண்டாவது மகனையும் காண முடியாது போயிற்று: மூன்று ஆண்டுகளுக்குப்பின் சிலாவத்துறை இராணுவமுகாம் தகர்ப்பில் வீரகாவியமான செய்தி வந்தது. செல்லக்குட்டியண்ணனும் அவரது மனைவியும் கலங்கவில்லை. அவர்கள் கலங்கமாட்டார்கள். ஏனெனில் பசுமையான வயல் வெளிகளின் நடுவே இருந்த அவர்களின் குடிசை கண்முன்னாலேயே இராணுவத்தால் தீயிடப்பட்டது. அனைத்தையும் இழந்து இன்று அகதி என்ற முத்திரையோடு இருக்கின்றார்கள்.

கடந்துபோன நினைவுகள் அவர் நெற்றியிலும், கன்னத்திலும் வியர்வைத்துளிகளாய் அரும்பி நின்றன. துவாய்த் துண்டினால் துடைத்துக் கொண்டார். கடந்துபோன நினைவுகளை விட நேற்று நடந்து முடிந்த சம்பவங்கள் தான் அவரை சற்று நிலைகுலைய வைத்தது.

ஃ ஃ ஃ

கலையரங்கத்தினுள் கிளியொன்றைக் கொண்டுவந்து கூட்டினுள் அடைத்து வைத்திருந்தார்கள். இரண்டு நாட்களாக உணவு எதனையும் அது உண்ணவில்லை. தன் உறவுகளுக்கு குரல் கொடுத்து அழுது கொண்டேயிருந்தது. தனது துயரக்குரல் தன் இனத்துக்கு கேட்கும்; அவை எப்படியும் தன்னை வந்து காக்கும் என்ற ஒரு நம்பிக்கை அதற்கிருந்தது.

''அந்தக் கிளியை சுதந்திரமாக வாழவிட வேண்டும். அதனைத் திறந்து விடுங்கள்'' என்று அங்குள்ள அனைத்துக் கலைஞர்களையும் செல்லக்குட்டியண்ணன் கெஞ்சிக் கேட்டுவிட்டார். அவருடைய வேண்டுதலுக்கோ அல்லது கிளியின் துயரக்குரலுக்கோ எவரும் செவிசாய்க்கவில்லை. பொழுது கவிந்தது செல்லக்குட்டியண்ணன் கிளிக்கூட்டினருகே சென்றார். தனனுடைய விரல்களை கூட்டில் வைத்தார். தன்னுடைய சொண்டினால் அவருடைய விரல்களைக் கவ்விக் கவ்வி கண்ணீர்விட்டு அழுதது. மனந்தாங்கமுடியாத வேதனையோடு வீட்டுக்கு சென்றார். இரவு முழுவதும் அவரால் தூங்கமுடியவில்லை.

விடிந்ததும் விடியாததுமாக கலையரங்கத்துக்கு விரைந்தார். அவருடைய மனதில் உறுதியான முடிவிருந்தது. கலையரங்கத்துக்குள் மெதுவாக நுழைந்தார். அங்கு நிற்கின்ற நாய் தன் திட்டத்தைக் குழப்பிவிடுமோ என்ற ஐயத்தில் மனம்படபடத்தது. கிளிக்கூட்டை நெருங்கிவிட்டார். ஓயாமல் அழுதுகொண்டிருந்த கிளியின் குரலை காணவில்லை அழுது களைத்து உறங்கிவிட்டது போலிருக்கிறது. என்று நினைத்துக் கொண்டே கூட்டைத்திறந்தார். அங்கே தன் சிறகுகளை அகல விரித்தபடி... அது நிரந்தரமாக உறங்கி விட்டது. கண்களில் வடிந்தநீர் காய்ந்துகிடந்தது. இனி அது பறக்காது......

செல்லக்குட்டியண்ணன் சிலநிமிடங்கள் நெஞ்சை இறுகப்பிடித்துக் கொண்டார். நிலைப்படியில் சார்ந்தபடி இருந்துவிட்டார். கிளிக்காக அழுது கொண்ட அவரது மனதை அதிகாலையில் வந்த சியாமசெட்டி விமானங்கள் திசைதிருப்பின. வீட்டுக்கு செல்லவோ அல்லது நிலையெடுத்துக் கொள்ளவோ அவகாசம் இருக்கவில்லை. அந்தளவு வேகமாக வந்து மளமளவெனக் குண்டுகளை வீசிவிட்டு அவை மறைந்துவிட்டன.

செல்லக்குட்டியண்ணன் வீடுநோக்கி அவசரமாக நடந்தார், அழுகுரல்கள் கேட்டன. யாருடைய வீடாக இருக்கும்?......

மணியத்தாரின் வீடுதான்

மணியத்தாரும் மனைவியும் தலையில் அடித்து அழுவதும் விழுவதுமாக இருந்தனர். நடப்பதற்கு என்ன இருக்கிறது? மணியத்தாரின் இரண்டு பிள்ளைகளும் சிதறிக்கிடந்தனர்.

இயக்கத்துக்கு போய்விடக் கூடாதென்பதற்காக அவர்களை எவ்வாறெல்லாம் வளர்த்தார். புதுச் சைக்கிள் கேட்டால் புதுச்சைக்கிள்; புது உடுப்புகேட்டால் புது உடுப்பு, கேட்டதெல்லாம் வாங்கிக்கொடுத்தார். தேசவிடுதலைக்கு பிள்ளைகளைக் கொடுத்த தாய்தந்தையர்கள் பற்றி வாய்க்குவந்தபடி எவ்வாறெல்லாம் விமர்ச்சித்தார்கள் ''மற்றவர்கள்போல் நாங்கள் பிள்ளை வளர்க்கவில்லை'' என்று பிள்ளை வளர்ப்பில் தாங்களே முன்னோடிகள் என்பதுபோல் பேசினார்கள். மண்கிண்டி சண்டையில் காயமடையும் வீரர்களுக்கு இரத்ததானமாவது கொடுப்போமெனச் சென்ற தமது பிள்ளைகளிரண்டையும் காலில் பிடித்து அழுதார்கள் ''இயக்கத்துக்குப் போகவும் வேண்டாம் இரத்தத்தானம் கொடுக்கவும் வேண்டாம். அப்படிப்போவதாயின் எங்களது பிணத்தின் மேலாக ஏறித்தான் செல்ல வேண்டும்'' என்றெல்லாம் தடுத்தார்கள். இன்று பிள்ளைகளின் பிணத்தின்மீது கிடந்து அழுதார்கள்.

நிலத்தில் படிந்த இரத்தக் கறைகளை எறும்புகள் மொய்க்கத் தொடங்கின. அந்தரத்தம் மண்ணில் ஊறிவிடக்கூடாதென்பதில் எறும்புகள் கூட கவனமாக இருந்தன.

''இயக்கத்தில் போய் செத்திருந்தாலும் நாலுபேர் என்னைப் போற்றி இருப்பாங்களே.. மாவீரரின் தாயென்று வரலாறு எழுதியிருப்பாங்களே'' .. என்று மணியத்தாரின் மனைவி அறிவு மயங்கிய நிலையில் புலம்பிக் கொண்டிருந்தாள்.

இழந்தபின் கிடைத்த ஞானம்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்ட செல்லக்குட்டியண்ணன் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார். ஏனோ அவ்விடத்தில் நின்று அனுதாபம்தெரிவிக்க அவருடைய மனம் விரும்பவில்லை. கூட்டில் இறந்து கிடந்தகிளி. வீட்டில் சிதறிக் கிடந்த மணியத்தாரின் பிள்ளைகள். இரண்டுமே மாறி மாறி மனதில் எழுந்து நிற்க வீட்டினை அடைந்தார். அவருடைய மனம் அமைதியை விரும்பியது. மூடிக்கிடந்த ''ஒகன்'' இசைக்கருவியை தூக்கி மடியில் வைத்துக் கொண்டார் இரண்டு மூன்று தடவைகள் அது! இசை எழுப்பியிருக்கும்.

பின்புறத்தேயிருந்துஇரண்டு மிருதுவான கரங்கள் அவரின் தோள்களைப்பற்றின. தனது மகள்தான் என்பது அவருக்குப் புரிந்தது. மெல்ல அவளின் கரங்களைப் பிடித்தவாறு அண்ணாந்து நோககினார்.

'' அப்பா, நானும் இயக்கத்திற்கு போகட்டுமா?... சும்மா இருந்தும் சாகிறதை விட நாட்டுக்காய் சாகலாமப்பா. அண்ணனாக்களின்ர இடைவெளியை என்னால நிரப்பமுடியுமப்பா. என்னப்பா?...... போகட்டுமா?......

செல்லக்குட்டியண்ணனின் கண்கள் நிரம்பின. மகளின் முகத்தைக் கண்ணீர் மறைத்தது. கூண்டில் இறந்து கிடந்த கிளியை நினைத்தார். மணியத்தாரின்பிள்ளைகளை நினைத்தார். அவரை அறியாமலே அவரது தலை அசைந்தது.

கண்ணீரைத்துடைத்து விட்டு மகளைப்பார்த்தார் அவள் அங்கு இல்லை. செல்லமாய் வளர்த்த கிளி. சுதந்திரத்துக்காய் தன் சிறகை விரித்துவிட்டது.

இப்போது அவருடைய மனதில் அமைதி ஏற்பட்டது கூண்டில் இருந்த கிளியை தான் திறந்து விட்டுவிட்டதாயும் அது சுதந்திரமாக பறந்து விட்டதாயும் ஒருபிரமை.

'' அப்பா, முத்தையன்கட்டுக்கு இண்டைக்கு இசைநிகழ்ச்சிக்கு போகவேணுமெண்டு சொன்ன னீங்களெலேப்பா'' கடைக்குட்டி மகனின் குரல் நேற்றைய நினைவுகளிலிருந்து அவரை திருப்பியது. மகனைப் பார்த்து சிரித்துக்கொண்டார். ''இவனும் கூண்டுக் கிளியா? இல்லை இவனுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை.'' என்று மனதுள் நினைத்தபடி புறப்படத்தயாராகினார் செல்லக்குட்டியண்ணன்.

## வெங்களத்தில் வாடா விரனுனியால் சுண்டிடுவார்!

முந்திவந்து தோன்றிய மூத்தகுடி எங்களினம்!
சொந்தப் பிறந்தகம் தொன்மைக் குமரிமடி!
சேயை வளர்த்தியே தேன்தமிழில் தாலாட்ட
தாயவள்தான் இட்ட தடுக்கன்றோ ஈழமிது!
நீலக் கடலில் நெடுங்காலம் நிற்குமெழில்
ஈழமண்ணில் எங்களினம் எப்பொழுதும் வாழ்ந்ததுவாம்!

சிங்கக் குடிகளிங்கு சேர்ந்த சிறுபுழுக்கள்;
எங்கள் வயலில் எழுந்த களைப்புல்லு!
ஆல மரத்தை அறுகு பழிப்பதுபோல்,
கோலக் குயிலையொரு கோட்டான் நகைப்பதுபோல்
வம்பு வழக்காடும் வாய்வீரச் சிங்களவா,
வெங்களத்தில் வாடா விரனுனியால் சுண்டிடுவார்!

எங்கள் உரிமை எழிநிலத்தை நாமாண்ட
தங்கத் தமிழரசை உன்னுரிமை என்றுநீ
கள்ள உறுதியின்று கையெழுதி வைத்தனையோ?
உள்ளபடி பார்ப்போம் ஒருகானீ வந்துபார்!
முப்படையும் குண்டும் முதிர்வீர வேங்கையர்
தற்கொடைக்கும் சாப்படைக்கும் தப்புமோ? வந்துபார்!

என்ன நினைத்தாய்? இடியும் எரிமலையும்
அன்ன தலைவனுள்ளான்; அன்னைபோல் காக்கின்றான்!
மானம் விளைய மறங்கனல மங்கையரும்
தானையணி சேர்ந்து சமராட வந்தார்காண்!
ஈழம் இனியுனக்(கு) ஈமச் சுடுகாடே!
ஆளும் வெறியால் அறிவிழந்து போகாதே!

ஆமைபோல் இங்கே அடங்கிக் கிடக்கநாம்
ஊமை முடமாம் உடற்குறையர் அல்லோமே!
ஈக்கும் உளதாகும் இந்த வுயிர்மதியோம்;
மாக்கள்போல் மானமின்றி வாழ்வார் தமிழரோ?
நல்லோர்கள் வாழ்வரினி நற்றமிழே வெல்லுமாம்
அல்லோர் அழிவர் அறி!

வீ. பரந்தாமன்

# ஏழைகளின் வாழ்க்கைக்கு உறுதியளிக்கும் பங்களாதேஷ் கிராமின் வங்கி

**பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் கே. கமலசேகரமுடன் ஒரு சந்திப்பு**

**சந்தித்தவர்: மதன்**

'பங்களாதேஷில்வறுமையிலும்வறுமையில் வாழும் மக்களின் பொருளாதார - சமூக நிலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பது கிராமின் வங்கி (Grameen Bank). இந்த வங்கியும் அதன் கிளைகளும் கிராம மட்டத்தில் செயற்படுகின்றன. கிராமின் வங்கியின் முன்னேற்றம் மூன்றாம் உலக நாடுகளில் பல வங்கியாளர்களை ஆச்சரியம்அடையச்செய்திருக்கிறது. வங்கியின் செயற்பாட்டைப் பார்வையிட்ட பலரும்இதைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த வங்கியின் செயற்பாடுகளை ஆராய்ந்து அறிய 1992 ஜூலையில் பங்களாதேஷ் சென்ற குழுவில் நானும் ஒருவன்'' என்கிறார் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் கே. கமலசேகரமும்.

இப்படிப்பட்ட இந்த வங்கியின் அமைப்புக் குறித்து இதுவரை அறிக்கை எதுவும் வெளிவரவில்லை. இப்பொழுது கத்தரிக்காய் முற்றிச் சந்தைக்கு வந்திருக்கிறது.

வாடிக்கையாளர் முட்டிமோதாத நேரமானபிற்பகல் 2 மணியளவில் முகாமையாளர் கமலசேகரம்அவர்களைப் பருத்தித்துறையில் அவரது தேசிய சேமிப்பு வங்கியில் சந்தித்தோம். எவ்வளவுவேலை இருந்தாலும் அதை வெளிக்காட்டாத அளவுக்கு அவர் பக்குவப்பட்டிருந்தார். ''கிராமின் வங்கியின் முன்னேற்றமும், செயற்பாடுகளும் என்னைமிகவும் கவர்ந்துள்ளது'' என்று கூறிய அவர், அந்த வங்கியின் முன்னேற்றத்துக்குப் பக்கபலமாக அமைந்த அனுபவங்களை மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் நிதானத்துடன் சொன்னார்.

''முதலில் ஒரு அடிப்படையான விஷயத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். கிராமின் வங்கியில் அனுபவங்கள் மூன்றாம் உலகநாடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான பலனைத் தரலாம். ஆனால் இந்த வங்கியின் அனுபவங்கள் எமது சூழ்நிலைக்குப் பொருந்தும். அப்படிப்பட்ட அனுபவம் எமக்கு இயற்கையாகவே கிடைத்து விடாது. நாமாகத் தேடிக்கொள்வதுதான் புத்திசாலித்தனம். சும்மா இருந்து சுகம் பெற முடியாது.'' என்கிறார் அவர்.

''மேற்குப் பாகிஸ்தானுடன் சண்டையிட்டுப் பிரிந்து 1971இல் பங்களாதேஷ் உருவாகியது. சுதந்திரமாக மூச்சுவிடலாம். வேலை கிடைக்கும், உணவு கிடைக்கும் — இதெல்லாம் மக்கள்சந்தோஷத்துக்கு ஒருகாரணம். ஆனால், நாடு சுதந்திரமான போது பலபிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்தியாவின் தலையீடு ஒரு பக்கம். போராடிச் சுதந்திரம் பெற்றும் நடைமுறையில் பங்களாதேஷ் எப்படியிருந்தது?

''பொதுவாக ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்க வேலைகளுக்கும், நிதானமான மூலதன வளர்ச்சிக்கும் ஆதரவு சிறிதும் அளிப்பதில்லை. மூலவளங்கள் மாத்திரமல்ல அவற்றைப் பாவிக்கின்ற வழிமுறைகளும் பங்களாதேஷில அழிக்கப்பட்டன. நிதிவளங்களைப் பேணுகின்ற மற்றும் அவற்றைப் பயன்படுத்துகின்ற ஆர்வமும், சிந்தனையும் கூட மழுங்கடிக்கப்பட்டன. மொழி, கலையும் கலாசாரமும் கருவழிக்கப்பட்டன. பங்களாதேஷ் அதன் பாரம்பரியத்தைப் பேணிக்காக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. இப்போது மூன்றாம் உலக நாடுகளில் சுதந்திரத்துக்காகப் போராடும் மக்களும் இதே நிலையில்தான் உள்ளனர்''



மிர்ராஜ் அலி என்னும் இவர் அலுமினிய பாத்திரங்களை எடுத்துக்கொண்டு கால் நடையாக 6 மைல் தூரம் சென்று விற்பனை செய்பவர். தினமும் 200 - 300 டாக்காவிற்கு வியாபாரம் செய்வார். இவர் கிராமின் வங்கியில் 3 முறைகளில் 20000 டாக்கா கடன் பெற்று வீடொன்றை கட்டிமுடித்துள்ளார்.

## கிராமின் வங்கியின் துவக்கம்

''இதற்கிடையில், சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் பொருளியல் பேராசிரியராயிருந்த முகமெட் ஜூனூஸ் அமெரிக்காவை விட்டு பங்களாதேஷ் வந்தார். மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த புத்திஜீவிகள் சிலர் தன்னந்தனியாகத் தமக்கென்று ஒரு வாழ்க்கையை ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்திக் கொள்வது வழக்கம், பங்களாதேஷ் சுதந்திரமடைந்ததற்கும் பேராசிரியர் ஜூனூஸ் தாய்நாடு திரும்பியதும் சரியாக இருந்தது. சிற்றகொங் பல்கலைக்கழகத்தில் ஜூனூஸ் பொருளியல் துறைப் பேராசிரியரானார். அவரது கவனமெல்லாம் ஏழைகள் மீதுதான். சிற்றகொங் பல்கலைக்கழகக் கற்கை நெறிகளுக்கும் நடைமுறைக்கும் எவ்விதசம்பந்தமும்இல்லைஎன்பதைப்பேராசிரியர்ஜூனூஸ் உணர அதிககாலம்பிடிக்கவில்லை. பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் வறுமை ஒழிப்புத் திட்டமெல்லாம் ஏட்டளவில்தான். இந்தக் கல்வி முறை பேராசிரியர் ஜூனூசுக்கு வெறுப்பூட்டிக் கொண்டேயிருந்தது.'' என்றார் முகாமையாளர் கே. கமலசேகரம்.

அவர் தொடர்ந்தார்:

சிற்றகொங் பல்கலைக்கழகத்தை ஒட்டினாற்போல் ஜோபுரா கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்து மக்களில் பெரும்பாலானோர் ஏழைகள் பொழுது விடிந்ததுமே மூங்கில் கதிரைகள் செய்வதுடன் உறவு வைத்துக்கொள்ளும் அவர்களுக்கு ஒரு கதிரைக்கு இரண்டு மூன்று ரூபாதான் ஆதாயம். சற்றுத்தள்ளி மூங்கில் விற்கப்படும் சந்தையாகவும் அங்கு ஒரு தெரு விளங்கியது. காடாக வளர்ந்திருக்கும் மூங்கிலுக்கும்கிராம மக்கள்வியாபாரிகளைத்தான் நாடவேண்டும். தினமும் அந்த வழியாகப் பல்கலைக்கழகத்துககுச் செல்லும் பேராசிரியருக்கு அந்தக் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகள் கவலையூட்டிக் கொண்டிருந்தன. அந்தக் கிராமத்திலும் ஒருவர்தான் சாஹிரா என்ற ஏழைப் பெண். கையில் கயிற்றையும் மூங்கிலையும் எடுத்துக் கொண்டு அலையும் இந்தப் பெண் பேராசிரியர் ஜூனூசின் கண்ணிற்பட்டாள். அவளின் ஏழ்மை அவரை ஈர்ந்து ஏதாவது வழியில் உதவ வேண்டும் என்று அங்கலாய்த்தார். அயலிலுள்ள வங்கியைத் தேடிப்போய் அந்த ஏழைப் பெண்ணுக்குச் சுயதொழில் ஊக்குவிப்புக் கடனுதவி வழங்கும்படி வேண்டினார்- பெயரளவில்மட்டுமே சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் என்று வங்கி விளம்பரப்படுத்தியதே அல்லாமல் வழமைபோல் பிணையாளர் இல்லாமல் கடன் வழங்க வங்கி மறுத்தது. ஏழைகளுக்குப் பணக்காரர் பிணை நிற்பது என்பது குதிரைக் கொம்பு. பேராசிரியர் ஜூனூஸ் கோபமானார். தானே பிணைநின்றார். கடனும் வழங்கப்பட்டது: அதன் பிறகு அந்தப் பெண்ணின் தொழில் நல்லபடி நடந்தது இந்த நம்பிக்கையைப் பயன்படுத்தி 1979 இல் பேராசிரியர் சுயமாகவே ஒரு வங்கியை ஆரம்பித்தார். இந்த வங்கியை பங்களாதேஷ் அரசு அவ்வளவாகக் கண்டுகொள்ளாமல் இருந்தது, காலம் தாழ்த்தி 1983இல் அரசு வங்கியை அங்கீகரித்தது'' என்று நிதானமாகச் சொன்னார்.

''அப்படி என்ன இந்த வங்கியின் தனிச்சிறப்பு?'' என்று கேட்டபோது, எப்படியான பதில் வருமோ என்ற சந்தேகம் உடனே கேள்வியைத் தன் பிரச்சினைபோல் எடுத்துக்கொண்டு அவசரப்படாமல் நிதானமாகப் பதில் கூறினார்.

## வங்கியின் அமைப்பு

''கிராமின் வங்கியில் (Grameen Bank) வாடிக்கையாளர் எல்லோரும் பங்குதாரர். மற்ற வங்கிகளைப் போல் குடியேற்ற நாட்டு நியமங்களின் மிச்ச சொச்சமாக இந்த வங்கி இயங்கவில்லை. வங்கியின் அமைப்பே அலாதியானது. 90 டாக்காஸ் (பங்களாதேஷ்ரூபா) கட்டிஎவரும் பங்குதாரர் ஆகலாம். ஒருவருக்கு ஒருவர் மாறி மாறிப் பிணை நிற்கலாம். கடன் பிணை நிற்பவருக்கு சமூக அந்தஸ்தும், பொருளாதார பலமும் முக்கியமல்ல.

''இன்னொரு விஷயம்- வங்கியின் அமைப்பு அடிமட்டத்திலேயே ஆரம்பமாகிறது. பெரிய பெரிய அதிகாரிகள் கிடையாது. அத்தனை பேரும் சாதாரண தொழிலாளர்கள்- குறைந்தது ஐந்து பேர் ஒரு குழுவாகச் சேர வேண்டும். இந்த ஐந்து பேரும் இரத்த உறவினர்களாக இருப்பது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. காரணம், குடும்பத்தில் கஷ்டம் வந்தால் எல்லாம் கிணற்றுக்குள் போட்ட கல்லுப்போல் ஆகிவிடும். குறைந்தது ஐந்து முதல் எட்டுக் குழுக்கள் சேர்ந்து கூட்டுக் குழுவாக இயங்குகின்றது. கூட்டுக்குழு பிரதேச வங்கிக் கிளையுடன் இணைத்துக் கொள்ளப்படுகிறது. ஊரின் நடுவில் ஒருமையத்தை உருவாக்கிக் கூட்டுக் குழுவினர் ஒரு மனதான முடிவை எடுத்துக் கொள்வார்கள். தீர்மானங்கள் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டத்திற்குப் போகும். மேலிருந்து திணிக்கப்படுவதில்லை. கூட்டுக் குழுக் கூட்டங்களில் வங்கிச் சேவகர்களும் பிரசன்னமாயிருக்கிறார்கள். வங்கி அதிகாரிகள் என்று அங்கு அழைப்பதில்லை. வங்கிச் சேவகர்கள் நேர்மையானவர்கள். அவர்கள் எலும்புத் துண்டுகளுக்கு அலைகிறவர் அல்லர். குழு, மையம், கிளைகள், பிரதேசம், வலயம், தலைமைச் செயலகம் என்று கிராமின் வங்கி அகலக் கால் வைத்துள்ளது.'' என்று கூறினார் கமலசேகரம்.

''பல நிகழ்ச்சிகள் இப்போதுதான் நினைவுக்கு வருகின்றன. பங்களாதேஷுக்குச் சென்ற எங்களை, 'வங்கியின் நிர்வாகம் அப்படியிருக்கிறது அல்லது இப்படியிருக்கிறது' என்று வங்கிச் சேவகர்கள் சொல்லவில்லை. 'ஊர் ஊராய்ப் போய் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்' என்றார்கள். ஆவலோடு வங்கிக் கூட்டங்கள் நடககிற இடங்களுக்குச்சென்றுபார்த்ததில்பலவிஷயங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அங்கு தலைவர், செயலர், மற்றும் மூன்று நிர்வாக சபை உறுப்பினர் மற்றும் வங்கிச் சேவகர்கள் என்ற ஒழுங்கில் நிலத்தில் உட்கார்ந்தே கூட்டம் நடத்துவார்கள். கூட்டம் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்தாற் போல் சுறுசுறுப்பாகஇருப்பதற்கான தேகப்பயிற்சியுடன் கூட்டத்தின் தலைவி கையைஉயர்த்தி கிராமின்வங்கியின் கொள்கை வாசகமான 'வாழ்க்கையின் சகல நடவடிக்கைகளிலும் கட்டுப்பாடு, ஐக்கியம், துணிவு மற்றும் கடின உழைப்பு' என்பதினைக் கூற மற்றவர்கள் அதனைத் திரும்பவும் கூறுவார்கள். இன்னொரு விஷயம் பின்வரும் தீர்மானங்களும் ஒவ்வொரு கூட்டங்களில் மீள வலியுறுத்தப் படுகின்றன.

- எமது குடும்பங்களைச் செழிப்படையச் செய்வோம்.
- பாழடைந்த வீடுகளில் வாழ்வதில்லை. வீடுகளைத் திருத்துவதுடன் விரைவில் புதிய வீடுகளை அமைத்துக் கொள்வோம்.
- வருடம் பூராவும் அதிக உணவு பயிரிடுதல் வயிறு நிறைய உண்டுமே லதிகமான காய் கறிகளை விற்போம்.
- நாற்று நடும் காலங்களில் முடிந்தளவு அதிகம் நாற்றுக்களை பயிரிடுவோம்.
- எமது குடும்பங்களைச் சிறிதாக வைத்திருக்கத் திட்டமிடுதல், எங்கள்செலவுகளைக் குறைத்தல். குழந்தைகளின் உடல் நலத்தைப் பேணுவோம்
- எங்கள் பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக உழைத்து அவர்களுக்குக் கல்வி அறிவு புகட்டுவோம்.
- மலசலக் குழிகளை அமைத்து அவற்றையே பாவிப்போம்.
- சூழல் மற்றும் எமது குழந்தைகளின் சுகாதாரத்தைப் பேணுவோம்.
- குழாய்க் கிணற்று நீரைப் குடிப்போம். குழாய்க் கிணறு இல்லாதவிடத்துக் கொதித்து ஆறிய நீரைக் குடிப்போம்.
- மகளிர் திருமணத்தின் போது சீதனம் வாங்குவதும் இல்லை. மகளிர் திருமணத்தின் போது நாம் சீதனம் கொடுப்பதுமில்லை. பால்ய விவாகம் செய்வதில்லை.
- மற்றவர்களுக்கு இன்னல் விளைவிப்பதில்லை. மற்றவர்கள் இன்னல் விளைவிப்பதை நாம் அனுமதிக்கப்போவதுமில்லை.
- அதிக வருமானத்தை எதிர்பார்த்து பெரிய முதலீடுகளை நாம் கூட்டாக முயற்சிப்போம்.
- மற்றவர்களுக்கு உதவ நாம் தயார் நிலையில் இருப்போம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தனியார் மருத்துவமனையில்

# சேவைபுரிய டாக்டர்களுக்கு அனுமதி; நோயாளர்களுக்கு நிபந்தனை

## சிறிலங்காவில் புதிய மருத்துவ கொள்கை

தேசிய மருத்துவக் கொள்கை ஒன்றை வகுப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணிக் குழு, அரசாங்க ஆஸ்பத்திரி மருத்துவர்கள் தனியார் மருத்துவ மனைகளில் சேவையில் ஈடுபடுவதால் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

பட்டப்பின் படிப்பு தேசிய மருத்துவக் கல்லூரி சமுதாய மருத்துவப் பிரிவின் தலைவர் ஏர்ளி டி பொன்சேகா தலைமையிலான பதினாறு பேர் கொண்ட உயர்மட்ட குழுவே இவ்வாறு பரிந்துரைத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசாங்க ஆஸ்பத்திரி வேலை நேரத்திற்கு பிறகு அரசாங்க ஆஸ்பத்திரி மருத்துவர்கள் தனியார் மருத்துவ மனைகளில் சேவையில் ஈடுபடலாம்.

தனியார் மருத்துவ மனைகளில் வைத்திய ஆலோசனை பெறும் நோயாளர்கள் அரசாங்க ஆஸ்பத்திரிகளில்பணம் அறவிடும் வார்ட்டில் அனுமதிக்கப் படவேண்டும்.

தனியார் மருத்துவ மனைகளில் அரசாங்க மருத்துவர்களின் ஆலோசனையைப் பெறுபவர்களை இலவசவார்ட்டில் அனுமதிக்கக் கூடாது.

நோயாளரைப் பணம் அறவிடும் வார்ட்டுகளில் அனுமதிப்பதனால் அறவிடப்படும் பணம் சம்பந்தப்பட்ட அரசாங்க ஆஸ்பத்திரியின் அபிவிருத்தி நிதியத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பணம் அறவிடும் வாட்டுகளில் அனுமதிக்கப்படும் நோயாளரிடமிருந்து மருந்துச் செலவு, அறுவைச் சிகிச்சைச் செலவு, பரிசோதனைச் செலவு மற்றும் கட்டில்-அறை வாடகைப் பணம் அறவிடப் பட வேண்டும்.

மேற்படி பரிந்துரைகளைத் தீவிரமாகச் செயற்படுத்துவதற்கு உதவும் வகையில் ஒவ்வொரு அரசாங்க ஆஸ்பத்திரியிலும் கட்டில்களில் பத்து விகிதத்தைப் பணம் அறவிடும் கட்டிலாக மாற்ற வேண்டும்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் தனியார் மருத்துவ மனைகளில் சேவையாற்றுவதால் மருத்துவ சேவையின் தரம் குறைந்துவிட்டதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

''தனியார்மருத்துவசேவை துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன'' - இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் 4000 வகை மருந்துகள் பாவனைக்கு ஏற்றவை என்று பதிவு செய்யப் பட்டுள்ளன. தனியார் மருத்துவ மனைகளின் மருந்துத் தேவையில் மூன்றில் இரண்டு பங்கு மருந்துகள் 10 மருந்து உற்பத்தியாளர்களாலும்' 60 மருந்து இறககுமதியாளர்களாலும் வழங்கப்படுகின்றன. மருந்து வகைகளின் தரத்தை உத்தரவாதம் செய்வதோடு, போலியான விளம்பரங்களால் பாவனையாளர் ஏமாற்றப்படுவதையும் தடுத்தல் அவசியம் என்று அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.




## புலிகளின்

யாதிருப்பதாக மீளக் குடியமர்த்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வீடுகளில் பாதுகாப்புப் படைகள் குடிகொண்டிருப்பதே இதற்குக்காரணம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

பொலிசார் தங்கியிருக்கும் வீடுகளுக்கு வாடகை கொடுப்பது பற்றி மன்னார் பொலிஸ் திணைக்களம் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று அந்த மகாநாட்டில்கோரப்பட்டது.

முக்கிய பணியில் படையினர் ஈடுபட்டிருப்பதால்இராணுவம் அந்த வீடுகளைவிட்டு இப்போதைக்கு வெளியேற முடியாது. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இப்படி இராணுவம் வீடுகளைச் சுவீகரிப்பது ஒன்றும் புதிதல்ல என்றுஇராணுவத்தினர் தரப்பில் கூறப் பட்டது.

மன்னார் தீவில் உணவுப் பற்றாக்குறை நிலவுவதாகவும், உணவு விநியோகத்தை மேற் கொள்வதற்கு எரிபொருள் பற்றாக்குறையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மன்னார் பெருநிலப்பரப்பில்உணவுநிலைமை திருப்திகரமாக உள்ளது என்று அதிகாரிகள் கூறினர்.

மன்னார்க் கடலில் இந்திய மீனவர் மீன் பிடிப்பதை தடுக்குமாறும் பல அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

-இவ்வாறு சாமிந்திரா பெர்டினன்டோ அக்கட்டுரையில் எழுதியுள்ளார்.

## ஏழைகளின்

- வங்கி மையம் ஒன்றில் ஒழுங்கீனம் நடந்ததாக அறிந்தால் அங்கு சென்று நாம் அதைச் சீர் செய்வோம்.
- எமது மையங்களில் உடற் பயிற்சியை அறிமுகம்செய்வோம். கூட்டாகச் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.
- மேற்படி அம்சங்களை செயற்படுத்துதல் சுலபமான காரியமல்ல. இதை மேலிருந்து திணித்து எவரும் வெற்றிகாண முடியாது. நிறைவேற்ற வேண்டியது சாதாரண மக்கள் தான் என்பது கமலசேகரம் அவர்களின் விவாதம்.

### வங்கி நடவடிக்கைகளும் அமைப்பும்

''கிராமின் வங்கியின் அனுபவங்களை நாமும் பகிர்ந்து கொள்ள விரும்பினால் வங்கியின் உண்மையான, நிச்சயமான கோவைகளைப்பற்றித் தெரிந்திருப்பது மிகவும் நல்லது வங்கியின் கனவுகள் உண்மையாகி வருகின்றன அங்கு ஏழைகளின் உலகமே மாறி விட்டது. 68,000 கிராமங்களை உள்ளடக்கிய 64 மாவட்டங்களைக் கொண்டது பங்களாதேஷ் உலகத்திலுள்ள வறிய நாடுகளில் இதுவும் ஒன்று. 33 விகிதம் மக்கள்தான் எழுத்தறிவுடையவர்கள். காற்று, மழை, கடல் கொந்தளிப்பு ஆகிய இயற்கையின் சீற்றங்களால் அடிக்கடி பாதிக்கப்படும் நாடு. இத்தனைக்கும் மத்தியில் மொத்தம் 64 மாவட்டங்களில் எல்லாமாக 42 மாவட்டங்களில் இந்த வங்கிக்கிளைகள் உள்ளன. பங்களாதேஷ் முழுவதுமாக 900 கிளைகள் இதனால் இப்போது 23,000 கிராமங்கள் பயனடைகின்றன. 14,000 சேவகர்கள் வங்கியில் பணிசெய்கிறார்கள். 15 பேர் கொண்ட பணிப்பாளர் சபை வங்கியின் செயற்பாட்டைக் கவனிக்கிறது. வங்கியின் பிரதம முகாமையாளர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரி இந்தவங்கி அதன் சோதனை காலத்தைத் தாண்டிவிட்டது போகப் போக இது ஏனைய கிராமங்களுக்கும் விஸ்தரிக் கப்படவுள்ளது.

''வங்கி 2,000 முதல் 10,000 ரூபா வரை கடனுதவி வழங்கி வருகிறது. துரவுகளில் மீன்வளர்த்தல், கால்நடை வளர்த்தல், மூங்கில் தளபாடங்கள் செய்தல் போன்ற சீவியத்துக்கு வேண்டிய தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. கிழமைத் தவணை அல்லது இரண்டுகிழமைத் தவணையில் கடனைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்ட வேண்டும். தொழிலுக்கு வேண்டிய உதவி, ஆலோசனை அனைத்தும் வங்கி அபிவிருத்தி சேவகர்களால் வழங்கப்படுகிறது தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால் அதற்குஅபிவிருத்தி சேவகரும்தான் பொறுப்பாக கருதப்படுகிறார். கூட்டுக் குழுவில் உள்ள தலைவர், செயலர் ஆகியோர் முதலில் கடன் பெற முடியாது. முதலில் சாதாரண உறுப்பினர். பிறகுதான் மற்றவர்கள் கிராமின் வங்கி மக்களைத் தேடிப் போகிறது. வீட்டு வாசலிலேயே கடன் கொடுக்கப்படுகிறது என்றால் பாருங்களேன்.

''கொடுத்த கடனில் 98 சதவிகிதத்தை வங்கி மீளப்பெறுகிறது. ஆனால் இதைப் பிலிப்பின்ஸ், நோர்வேமற்றும்கனடா நாட்டுப் பிரதிநிதிகள் நம்புகிறார்கள் இல்லை. வழங்கிய கடனில் 50 சத விகிதத்தைத்தான் மீளப் பெறமுடியும். அதுதான் நியதி. அப்படியிருக்க இது எவ்வாறு சாத்தியமாகும் என்று மூக்கின் மேல் கைவைக்கிறார்கள். கனடா, நோர்வே போலவே தான் இங்கும் நடக்க வேண்டும் என்பது என்ன நியாயம்-'' இதைச் சொல்லும் போது கமலசேகரம் குரலில் சற்று வருத்தம்.

''இதற்கிடையில் இன்னுமொரு விடயம். வழங்கப்படும் கடனுக்கு 5விகிதவட்டி தவணை தப்பிய கடனுக்குத் தண்டம், கூட்டத்தில் பங்கு பற்றுபவர்கள் செலுத்தும் தலா ஒரு டாக்கா (ரூபா) என்று குழு நிதியத்துக்குப் பணம் சேர்கிறது. இதைவிட வங்கியின் தலைமையும் ஒரு தொகையை வழங்குகிறது. இந்த நிதியத்தைக் கொண்டு அடிமட்டத்தில் ஐந்து பேர் கொண்ட குழு ஒரு மினி வங்கியாக இயங்குகிறது. இப்படியான குழுக்கள் கிராமங்கள் தோறும் ஏராளம். உதாரணமாக, கால்நடை நோய் ஏற்பட்டால் இந்தக் குழு நிதியத்திலிருந்து செலவு செய்யலாம். மரணம், திருமணம், நோய் நொடிகளுக்கும் இந்த நிதியத்திலிருந்து உதவி வழங்கப்படுகிறது. இதைவிடக் குறுகிய காலக் கடனும் தரப்படுகிறது. வங்கிக்குக் கடமை நேரங்கள் உண்டு என்றாலும் மக்களின் வசதி கருதியே வங்கிக் கூட்டங்கள் நடைபெறுகின்றன' என்று கூறிவிட்டு நிமிர்ந்து பார்த்தார் நேரம் மூன்று மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

''வங்கியின் பிரதான முகாமையாளர் பேராசிரியர் ஜுனூஸ் தேர்தல் களத்தில் இறங்கினால் வெற்றிநிச்சயம் என்று அங்குள்ள மக்கள் பேசிக்கொள்கிறார்கள். காரணம், சாதாரண மக்கள்தான் அவரது அடித்தளம் ஆனால் அந்த மனுஷன் அரசியலில் கையை நனைக்காமல் நாட்டுப் பற்றோடு செயலாற்றுகிறார். அதை நினைகக நினைகக மனதுககு இதம் தருகிறது இந்தப் பண்பு மற்றவர்களுக்கும்வரவேண்டும்.'' என்றார்

''இந்த வங்கிமுறை எமது சூழலுககுப் பயன்பொருத்தமாய் அமையுமா?'' என்று கேட்டபோது-

இதே மாதிரி ஒரு அமைப்பை இங்கேயும் உருவாககலாம் என்ற எண்ணம் எனக்குள் உள்ளூர உண்டு. இங்குள்ள பனம்பொருள் உற்பத்திதுறை மீன்பிடித் தொழில் ஆகிய இன்னோரன்ன கிராமின் வங்கி முறையை அறிமுகப்படுத்தலாம். குழுமட்டத்தில் ஆரம்ப நிலையில் எவரும் ஆரம்பிக்கலாம். அரசாங்கத்தின் நிதி உதவியை நாட வேண்டிய தேவையுமில்லை: பெரிய பண முதலீடும் அவசியமில்லை. ஆனால். பங்களாதேஷில் இந்த வங்கியின் அலாதியான தன்மை என்னவென்றால், வங்கி உறுப்பினர்களில் பெண்களின் எண்ணிக்கை 92 விகிதம் பங்களாதேஷ்கிராமங்கள் தோறும் குடிசைக்கைத்தொழிலில் பெண்கள் அதிகமாக ஈடுபட்டிருப்பதாலேயே இந்த நிலை யாழ்ப்பாணத்தில் மகளிர் அமைப்புகளும், மகளிர் நிலையங்களும் கூட கிராமின் வங்கியின் உதாரணத்தைப் பின்பற்றலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் தான் முதலாக்க நடவடிக்கைகள் நடைபெறுவதில்லை. முதலைக் கொண்டு முதலை உருவாக்குவதில் இங்கு ஒரு அலட்சியப் போக்குக் காணப்படுகிறது. இந்நிலை மாற வேண்டும். வங்கிக்கடன் அன்பளிப்பல்ல. யாழ்ப்பாணத்தில் உள்ள சீட்டு முறை காசைக் காசாக்குவது. முதலாக்கத்தையும் சொத்தில் சிறு தொழில்களையும் சாதாரண மக்கள் ஆரம்பிப்பதானால் கிராமின் வங்கி போன்ற ஒரு வங்கியை அமைப்பது பயன் பொருத்தமாக அமையும்.'' புன்னகைத்தவாறு முகாமையாளர் கே. கமலசேகரம் வணக்கம் தெரிவித்து விடைபெற்றுக் கொண்டார்.

விற்பனையாகிறது
அறிவுக் களஞ்சியம் -20
(7394)

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

வருடாந்த பொதுக்கூட்டம்

அன்புடையீர்!

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 06-03-1994-ம் திகதி காலை 9-30 மணிக்கு கோட்டல் ஞானம்ஸில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாப்பின் விதி 13 ''அ''; 21 ''எ'' இணங்க அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யலாம்.

யாப்பின் விதி 21 ''ஊ'' இணங்க கூட்ட நிகழ்ச்சி நிரல்கள் தனித்தனியாக பின்னர் அறிவிக்கப்படும்.

நன்றி

மு. பத்மநாதன்,
(செயலர்)

(சி-8505)

# இரண்டாம் பதவிக் காலத்தில் அரியணை ஏற டி. பி. விஜேதுங்கா தயார் செய்கிறார்

சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது இரண்டாவது பதவிக்காலம் குறித்து மிகவும் அக்கறையாவே இருந்துவருகின்றார். இதற்கென கடந்தகால சிறிலங்கா ஜனாதிபதிகள் போன்று இவரும் தனது தற்போதைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் முனைப்பாக இருப்பதாகத் தெரிகிறது.

இரண்டாவதுபதவி நிலைக் காலத்தைக்கொண்ட டி. பி. விஜேதுங்காவின் நடவடிக்கைகள் மூன்று நிலைகளில் நடைபெறுகின்றமையை அவதானிக்க கூடியதாகவுள்ளது. ஒன்று தனது 'வாக்கு வங்கி'யைபௌத்த-சிங்கள அடிப்படைவாதத்தில் இருந்து உருவாக்க முனைகின்றார். இதில் அவர் கணிசமான வெற்றியும் கண்டுள்ளார். இதுஇன்று மறைமுகமான ஓர் அம்சமாகவும் இல்லை.

டி. பி. விஜேதுங்காவின் இப் போக்கு குறித்து பி. பி. ஸி. அரசியல் விமர்சகர் கல்பனா ஐசக் ''எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிபெற வேண்டுவதற்காக டி. பி.விஜேதுங்கா சிங்களத் தேசியவாதத்தைப் பயன்படுத்த முயற்சித்து வருகின்றார். இலங்கையில் சிங்கள தேசியவாதம் ஓர் அரசியல் சக்தியாக மீண்டும் வெளிப்படுகின்றது'' எனக் குறிப்பிடுகின்றார்.

டி. பி. விஜேதுங்காவின் இரண்டாவது நடவடிக்கையாக எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையுள்ளது. இது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் பாணியிலானது. இவ்விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என முக்கிய கட்சிகள்வரை இவரது கை நீண்டுள்ளது. இந் நடவடிக்கையின் மூலம் சி. சு. கட்சியின் தேசிய அமைப்பாளர் கட்சியைவிட்டு வெளியேறினார். இ.தொ. காவின் செயலாளரும், மேலும் பலரும் தலைமையுடன் முரண்பட்டுக்கொண்டுள்ளனர். ஐ. ஐ. தே. முன்னணித் தலைவரே கட்சியைவிட்டு ஐ. தே. கவுடன் இணைந்துகொண்டார். செயலாளர் காலம் கனிந்து வரும்வரையில் காத்துக்கொண்டுள்ளார்.

இவ்விரு நிலைகளிலும் கணிசமான வெற்றிகண்டுள்ள டி. பி. விஜேதுங்கா மூன்றாவது நடவடிக்கை மூலமாக தனது பதவியை சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்த விளைகின்றார். அரசியலமைப்பு முறையில் செய்யப்படும் மாற்றம் ஒன்றின்மூலம் இதனை நிறைவேற்றலாம் என அவர் திட்டமிடுகின்றார். இதன்படி தற்பொழுதுள்ள ஜனாதிபதித் தேர்தல் முறையை ரத்துச்செய்துவிட்டு புதிதாக பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் உறுப்பினர்கள் அதாவது பெரும்பான்மை பலம் பெறும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறையை அமுலாக்க முற்படுகின்றார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இதற்குச் சில காரணங்களையும் கற்பிக்க முற்படுகின்றார்.

இதில். 1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு முறை நாட்டில் பெரும்பான்மை சிங்கள சமுதாயத்தின் பிரதிநிதியாக விளங்கும் குழுக்களுக்கு இடையே கருத்து முரண்பாடுகளை, பிளவுகளை ஏற்படுத்துவதோடு, ஒற்றையாட்சி முறைக்கும் பாதகமான சூழ்நிலையை உருவாக்குகின்றது என்பதும், அடுத்து தேர்தல் முறையானது சிறுபான்மை மக்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு மீறியஅளவில் உரிமைகொண்டாடவும் வகைசெய்கின்றது எனவும், ஜனாதிபதி தேர்தல் செலவீடான 40கோடி ரூபா மீதப்படுத்தப்படும் என்பதும் அவர் வெளிப்படையாகக் கூறியுள்ள காரணங்கள் ஆகும்.

டி. பி. விஜேதுங்கா இவ்வாறு காரணங்களை அடுக்கிக்கொண்டு போனாலும் அவர் கூறியவற்றில், சிறுபான்மை மக்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு மீறிய அளவில் உரிமை கொண்டாடுகின்றனர் என்பதும், அவர் கூறாதவற்றில், இரண்டாம் பதவிக்காலத்தில் எவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்பதுமே அடிப்படைக் காரணங்களாகும் சுருக்கமாகக்கூறின் டி. பி. விஜேதுங்காவின் இந்நிலைப்பாடானது. அவரது அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான நடவடிக்கை என்பது மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதிகளிடம் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தும் நடவடிக்கையும் ஆகும்.

டி. பி. விஜேதுங்கா பதவி ஏற்ற காலத்தில் இருந்தே பொதுவாக அரசியல் அமைப்பு மாற்றத்தைப் பற்றிப் பேசிவருகின்றனர். டி.பி விஜேதுங்கா பதவி ஏற்று ஒருமாத காலத்தில் இந்தியாவிலிருந்து வெளியாகும் 'புரன்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ''நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை பற்றி இப்போதுள்ள கருத்து இரண்டாகப் பிரிந்துள்ளது. முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அவசியம் என்றனர். இப்போது வெஸ்மினிஸ்டர்முறை வேண்டும் எனக் கூறுகின்றனர்... நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு பரவலான பெரும் அதிகாரங்கள் இருப்பதையிட்டு நான் சந்தோசப்படவில்லை. எனக்கு அப்படியான பெரிய அதிகாரங்கள் அவசியமில்லை'' எனத் தெரிவித்திருந்தார்.

இதற்கு ஏற்றால்போல் சில நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் அமைப்பு, அரசியல்விவகாரங்களுக்கென புதிய அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கென பிரபலசட்டத்தரணியான சொக்ஸியும் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். இதேவேளை, தேர்தல் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து அரசியலமைப்பில் மாற்றம்செய்வதற்கெனபிரசுமமந்திரி ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றும் கடந்த ஆண்டு யூலை மாதத்தில் நியமிக்கப்பட்டது.

ஆனால், சுமார் ஏழுமாத ஆட்சி அதிகாரத்தின் பின்னர் டி. பி. விஜேதுங்கா அரசியலமைப்பு முறை மாற்றம் குறித்துப் பேசுவது முன்னர் அவர் கூறிக்கொண்ட மாற்றத்தில் இருந்து வேறுபட்டதாகவே உள்ளது. அதாவது கடந்த வருடம் யூலையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தெரிவுக்குழு 1988, 1989 ஆம் ஆண்டு, ஜனாதிபதி, மற்றும் பொதுத்தேர்தலில், இடம் பெற்ற குறைபாடுகளை நீக்குவதற்கான சிபார்சுகளைச் செய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், தற்போது டி. பி. விஜேதுங்கா அறிவித்துள்ளமையானது, ஜனாதிபதி தேர்தலையே நீக்குவதற்கான சிபார்சாக அமையப் போவதாகவுள்ளது.

டி. பி. விஜேதுங்காவின் இந் நிலைப்பாடு ரீதியான மாற்றமானது, அவர் ஜனாதிபதிப் பதவியின் அதிகாரச் சுவையைக் கண்டுகொண்டதன் வெளிப்பாடு என்றே கூற முடியும். பதவி ஏற்ற காலத்தில், தமக்குப் பெரும் அதிகாரங்கள் இருப்பதையிட்டு நான் சந்தோசப்படவில்லை எனக் கூறிய ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா தற்பொழுது தனது பதவியை அடுத்த பதவிக் காலத்திற்கு நீடிப்பதற்கு வசதியாக அரசியல் அமைப்புச்சட்டத்தில் மாற்றம் கொண்டுவர முற்பட்டுள்ளமையையே இது புலப்படுத்துகின்றது.

ஆனால், டி. பி விஜேதுங்கா, முன்னர் கூறியவை ஓர் ஒப்புக்காக கூறினாரா எனக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிஏற்ற பின்னரும் சிலமுக்கிய அமைச்சர் பதவிகளை அவர் வைத்திருந்தமையானது அவர் நிறையவே அதிகார ஆசையைக் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுவதாகவே உள்ளது என சில விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அரசியலமைப்பில் டி. பி. விஜேதுங்காவால் செய்யப்படும் மாற்றமானது, நன்கு திட்டமிடப்பட்டு, கடந்த கால தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவைஎன்றேகொள்ள வைக்கின்றது. அதாவது ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில்உருவாக்கப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஐ. தே. கட்சியை ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்துபாதுகாப்பதற்கு எவ்வாறு உதவுகின்றதோ அதேபோன்று ஜனாதிபதியும் ஐ தே. கவினரே தொடர்நதும்வகிப்பதற்கான வழிசெய்யும்நோக்கம்கொண்டதாகும். அத்தோடு டி. பி. விஜேதுங்கா தனது இரண்டாவது பதவிக்காலத்தை உறுதிப்படுத்தும் நோக்கம் கொண்டதுமாகும்.

இவ்வாறானதொரு அரசியலமைப்பு மாற்றத்தை செய்வதற்கு டி. பி. விஜேதுங்கா இன்று முற்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதித் தேர்தல்வெற்றியில் அவருக்கு எழுந்துள்ள சந்தேகமே காரணமாகும் அதாவது சுதந்திரக் கட்சியின் தலைவியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அதற்கு ஈடுகொடுக்கக்கூடிய தலைமைத்துவ ஆற்றல் தனக்கு இருக்கின்றதா என டி. பி. விஜேதுங்காவிற்குஎழுந்துள்ள தடுமாற்றமே ஆகும்.

ஏற்கனவே டி. பி. விஜேதுங்கா தனது ஆதரவுத் தளத்தை பௌத்த-சிங்கள அடிப்படை வாதிகளுடன் இனம்காட்டியுள்ளார். இது ஒரு வகையில் அவரது தளத்தைச் சுருக்கியுள்ளது என்றே கூற வேண்டும். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைப் போன்றோ, அன்றி பிரேமதாசாவைப் போன்றோ சிறுபான்மையின் வாக்குகளைப் பெற அவர்முயற்சிக்கவில்லை. மாறாக அவர்களை ஓரம் கட்டவே முற்பட்டு நிற்கின்றார்.

இந் நிலையில் டி. பி. விஜேதுங்கா தனது அரசியல் பலத்தை பலப்படுத்த அரசியலமைப்பையும் தமக்குச் சாதகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதாவது முதலாவது பதவிக்காலம் எதிர்பாராத பிரேமதாசாவின்

**ஜெயராஜ்**

மரணத்தினால் கிட்டியதென்றால், இரண்டாவது பதவிக் காலத்தை திட்டமிட்டமுறையில் அரசியலமைப்பில் செய்யப்படும் திருத்தத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பார்க்கின்றார்.

அதாவது கடந்த காலத் தேர்தல் அநுபவமே விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை ஜே ஆர். ஜெயவர்தனா அறிமுகம் செய்பவைத்தது 'சுதந்திரஇலங்கையில்' நடைபெற்ற தேர்தல்களில் இருந்து ஜே. ஆர். ஜெயவர்தனா கண்டு கொண்டதானது ஐ தே. காவினது வாக்கு வங்கித்தளமானது மிகவும் பலமானது என்பதாகும். 1956ஆம் ஆண்டைத்தவிர (பண்டாரநாயக்கா காலம்) எந்தத் தேர்தலிலும் ஐ. தே. க சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட குறைவான வாக்குகளை பெறவில்லை. (அட்டவணையைப் பார்க்கவும்) 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் எட்டு ஆசனங்களை மட்டுமே ஐ தே. க பாராளுமன்றத்தில் பெற்றதாயினும் சுதந்திரக் கட்சியைவிட அதிக வாக்குகளையே பெற்றிருந்தது. இந்நிலையில் விகிதாசாரப் பிரதி நிதித்துவம் என்பது எப்போதும் ஐ தே. கவிற்கு சார்பாகவே தேர்தல் முடிவுகளை கொண்டு வரக் கூடியது ஆகும். சில வேளை எதிர்க் கட்சிகள் கூட்டு முறை அமைப்பினாலும் தனிப்பெரும் கட்சியாக ஐ தே. கட்சியே இத் தேர்தல் முறை மூலம் இருப்பதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகும்.

அத்தோடு ஐ. தே. கட்சியின் வாக்குவங்கியில் தளம்பல் மிகவும் குறைவாகவே உள்ளது. 1960 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட தேர்தல்களில் ஐ. தே. க எப்போதும் சுமார் 40வீத வாக்குகளை பெற்றே வந்துள்ளது. கடைசியாக இடம்பெற்ற ஏழு மாகாண சபைத் தேர்தலில் ஐ தே.க மூன்று மாகாண சபைகளை இழந்தபோதும் 46 9 வீத வாக்குகளைப் பெற்றிருந்தது.

ஆகையினால் ஐ. தே. கவின் வாக்குவங்கியில் டி.பி. விஜேதுங்கா நம்பிக்கை வைப்பதில்தவறில்லை இந்நிலையில் டி. பி விஜேதுங்கா தனக்குள்ள தேர்தல் வெற்றிக்கான அனுகூலங்களைவிட ஐ. தே. கவிற்கான தேர்தல் வெற்றிக்கான அனுகூலங்கள் அதிகமாக இருப்பதாகவே கருதுகின்றார் இதற்குக் கடந்த காலத்தில் தென்னிலங்கையில் இடம்பெற்ற கருத்துக்கணிப்புக்கள் சிலவற்றில் இவரது பெயர் பின்னணியில் இருந்தமையும் காரணமாக இருக்கலாம். இதன் காரணமாக அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் அவர் தனது பதவியை உறுதிப்படுத்திக்கொள்ள முற்படுகின்றார்.

இதே வேளை. டி, பி. விஜேதுங்கா இவ் அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் அதாவது பாராளுமன்ற உறுப்பினர் மூலம் ஜனாதிபதித் தெரிவு என்பதை உருவாக்குவதன் மூலம், ஜனாதிபதித் தெரிவில் சிறுபான்மை இனங்களால் ஏற்படும் பாதிப்பை இல்லாது ஒழிக்கவும் முற்படுகின்றார்.

அதாவது, பௌத்த-சிங்கள பேரினவாதத்திற்கான தலைமை வகிக்க முற்படும் டி. பி. விஜேதுங்கா தனது பதவியை சிறுபான்மை இனங்களின் வாக்குகள் தீர்மானிப்பதையோ, அன்றி சிறுபான்மை இனங்களினால் தனது பதவிக்கு ஆபத்து வருவதையோ அவர் திட்டமிட்டே தவிர்த்துவிட விரும்புகின்றார். இந்நிலையிலேயே அரசியல் அமைப்பு மாற்றத்திற்கும் ஒற்றையாட்சி முறையைப் பேணுவதெனவும், சிங்கள இனத்தின் ஒற்றுமை பற்றியும் பேசி இனவாதம் மூலம் ஆதரவு கோர முற்பட்டுள்ளார்,

இந்தவகையில் விஜேதுங்கா தனது பதவியை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையாக மட்டுமல்ல, பௌத்த சிங்களப் பேரினவாதத் தலைமையை உறுதிப்படுத்தும் நோக்கிலும், அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கு முற்பட்டு நிற்கின்றார், தனது தனிப்பட்ட ஆளுமையிலும தலைமைத்துவ ஆற்றலிலும் நம்பிக்கையீனம் கொண்டுள்ள டி. பி. விஜேதுங்கா அதற்கு ஐ தே. கட்சியையும் அரசியல் யாப்பையும் உபயோகப்படுத்த விழைகின்றார்.

### கடந்த கால தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகள் (வீதம்)

| | ஐ. தே. க. | சு. க | ல. ச. ச. க. | க. க. | ம. ஐ. மு | ஐ.ஐ.தே.மு. |
|---|---|---|---|---|---|---|
| 1952 | 44.08 | 15.52 | 13.11 | 5.79 | — | — |
| 1956 | 27.44 | — | 10.48 | 4.57 | 39.96 | — |
| 1960 மார்ச் | 29.62 | 21.12 | 10.50 | 4.62 | 10.62 | — |
| 1960 யூலை | 37.57 | 33.59 | 7.36 | 2.96 | — | — |
| 1965 | 38.93 | 30.24 | 7.45 | 2.71 | — | — |
| 1970 | 37.92 | 36.63 | 8.75 | 3.42 | — | — |
| 1977 | 50.92 | 29.72 | 3.06 | 1.98 | 0.39 | — |
| 1982 (A) | 54.00 | 40.05 | — | — | — | — |
| 1988 (B) | 50.43 | 44.95 | — | — | — | — |
| 1993 (C) | 46.90 | 36.09 | 0.88 | — | — | 14.54 |

(பொ. ஐ. மு)

A சர்வஜன வாக்கெடுப்பு B ஜனாதிபதித் தேர்தல் C 7மாகாண சபைகளுக்கான தேர்தல்

# அரசியல் தஞ்சம் வழங்குவதை அரைவாசியாக்க கனடா முடிவு

(மொன்றியல்)

கனடாவில் குடியேறுபவர்களின் எண்ணிக்கையை ஆண்டொன்றிற்கு இரண்டு இலட்சத்து 60 ஆயிரம் என உள்ள தற்போதைய மட்டத்தை தொடர்ந்து பேணுவதென அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை அரசியல் தஞ்சம் கோருவோருக்கான எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளைபிரிந்துவாழும் குடும்பங்கள் இணைந்து கொள்வதற்கும் பொருளாதாரத்திற்கும் தேவைப்படுவோரை இணைத்துக் கொள்வதற்கும் முன்னுரிமை அளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் லிபரல் கட்சிக்கு பல்வேறு இன மக்களிடமிருந்தும் பரவலான ஆதரவு கிடைத்ததாகவும் இதேவேளை மூன்றாவது எதிர்க்கட்சி வெளிநாட்டிலிருந்துகனடாவிற்குள்வருவோரின் தொகையை அரைவாசியாக குறைக்குமாறு ஆளும் கட்சியை கேட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐந்து பல்கலைக்கழக துணைவேந்தர்கள் தெரிவு

(கொழும்பு)

இலங்கையில் பல்கலைக்கழகங்களின் ஐந்து பல்கலைக் கழகங்களுக்குதுணைவேந்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பல்கலைக் கழகங்களுக்கு துணைவேந்தர்களை பல்கலைக்கழக ஆணைக்குழு தெரிவு செய்து இவர்களின் நியமனம் தொடர்பாக ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறப் பட்டு விட்டதாக தெரியவருகின்றது.

## நினைவு நாள் அனுஷ்டிப்பு

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் 25 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று அனுசரிக்கப்பட்டது.

இதையொட்டி திராவிட முன்னேற்றக்கழகம், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம்எம்ஜியார் அண்ணாதிராவிடமுன்னேற்றக்கழகம்ஆகியவற்றின் உறுப்பினர்கள் சென்னையில் அண்ணா சமாதிக்கு மௌன ஊர்வலம் சென்றன. இவர்கள் அண்ணா சமாதிக்கு மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தினர்.

# ஜோர்ஜியா குண்டுவெடிப்பு பாதுகாப்பமைச்சர் பலி

(மொஸ்கோ)

ஜோர்ஜியாக் குடியரசின் துணைப் பாதுகாப்பு அமைச்சர் அந்த நாட்டின் தலைநகர் ரிப்பிலிசியில் நிகழ்ந்த சக்திவாய்ந்த ஒரு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

அடுக்குமாடிக் கட்டடம் சேதமடைந்த இந்தக் குண்டு வெடிப்பினால் துணைப் பாதுகாப்பு அமைச்சரும், அவரது உறவினர் ஒருவரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. குண்டு வெடிப்புக்கான காரணம் தெரியவில்லை.

ஜோர்ஜியா தலைவர் எட்வார்டோ ஷவர்நோசாவுடன் உயர்நிலை சந்திப்பு நிகழ்த்துவதற்காக ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் ரிப்பிலிசி போய்ச்சேர்வதற்குச் சில மணி நேரத்திற்கு முன்னதாக இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.

தமிழ்நாட்டில் தடகளப் போட்டி;

# வாயுகொள்கலன் வெடித்து இருவர் பலி; 19பேர் காயம்

(சென்னை)

தமிழ்நாட்டில் நடைபெறும் சர்வதேச விளையாட்டு விழாவின்போது பலூன்கள் பறக்க விடுவதற்காக நிரப்பப்படும் வாயு கொள்கலன் வெடித்ததில் இருவர் பலியாகினர். 16 பாடசாலை மாணவர்கள் உட்பட 19 பேர் காயமடைந்தனர்.

மேற்படி சம்பவத்தின் போது மரணமடைந்த இருவரும் வாயுக்கம்பனி ஊழியர்கள் ஆவர். காயமடைந்தவர்கள் சென்னை அரச பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், இவ்விபத்து நேற்றுமுன்தினம் விழாவின் தொடக்கத்தில் நிகழ்ந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# 'கோமாரி' கப்பல் நாளையே புறப்படும்

(யாழ்ப்பாணம்)

இன்று பருத்தித்துறையில் இருந்து புறப்பட இருந்த 'கோமாரி' என்ற கப்பல் நாளையே புறப்பட்டுச் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சீரற்ற காலநிலையாலேயே கப்பல் தாமதமாகப் புறப்படுகிறது என்று கூறப்படுகிறது.

## வீரச்சாவு

விஜயேந்திர மூர்த்தி பாடசாலை வீதி விநாயகபுரம் அம்பாறை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஃ ஃ

## ஆதரவாளர் சின்னத்தம்பி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கரவெட்டி பிரதேசத்தில் கடந்த 30ஆம் திகதியன்று சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசத்துரோகிகளும் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த இரட்ணசிங்கம் சின்னத்தம்பி (வயது 18, கரவெட்டி மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

ஃ ஃ

## ஆதரவாளர் வசந்தன்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினர் மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தை கடந்த முதலாம் திகதி திடீரெனச் சுற்றிவளைத்தபோது சிக்கிய விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கந்தையா வசந்தன் (வாகரை மட்டக்களப்பு) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கலந்துரையாடல்

புலிகளின்குரல் வானொலிக் கலைஞர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பி. பகல் 3-00 மணிக்கு நல்லூரில் நடைபெறும் அனைத்து புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## தப்பி

பேரில் சரணடையும் தப்பியோடிய படையினருக்கே மன்னிப்பு வழங்கப்படும். தவிர இன்னும் தலைமறைவாக வாழும் படையினருக்கு நாம் மன்னிப்பு வழங்கப் போவதில்லை. இதுவே இராணுவ தளபதியின் கொள்கை என அப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்காவின்

முன் வந்திருப்பதாக தெரிய வந்துள்ளது.

எனவே யுத்தத்தின் இறுதித்தீர்வு முடிவை மிக விரைவில்மேற்கொள்ளப்படவேண்டும் எனவும், இந்த நிலை தொடருமானால் அழுத்த அடிப்படையில் தீர்வுகள் திணிக்கப்படலாம் என்பதையேபெரும்பாலும் எதிர்பார்க்கப்படலாம் என தெரிவிக்கப் படுகின்றது எனமேலும் அது குறிப்பிட்டது.

## ரணில்

கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலர் அந்தக் குண்டை அங்கு வைத்ததாகப் பின்னால் தெரியவந்தது.

## மாணவன் பலி

(கொழும்பு)

அமெரிக்காவில் பொறியியல் துறை படிக்கும் இலங்கை மாணவர் ஒருவர் காணாமல் போய் 15 நாட்களின் பின் அவரின் சடலம் காரின் டிக்கியில் இருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சுயந்த விஜயரட்ன என்ற (வயது 28) மாணவன் ராஜகிரிய பகுதியைச் சேர்ந்தவர்.

## யாழ்

கொள்ளலாம். அத்துடன் விரும்பின் அதற்கான பதிலையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதன்படி வழமையான செய்திகளுக்கு முதற் பத்து சொற்களுக்கும் நூறு ரூபாவும் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ஐந்து ரூபா வீதமும், வியாபாரச் செய்திகளாயின் முதற்பத்து சொற்களுக்கும் இருநூறு ரூபாவும் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் பதினைந்து ரூபா வீதமும் சலுகைச் செய்திகளான மரண அறிவித்தல்களாயின் முதற்பதினைந்து சொற்களுக்கும் பதினைந்து ரூபாவும் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் இரண்டு ரூபா வீதமும் செலுத்துதல் வேண்டும்.

அத்துடன் இம்மரண அறிவித்தல்களுக்கு குறிப்பிட்ட சிற்றூர் பொறுப்பாளர், கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் உறுதிப் படுத்திய கடிதத்துடனேயே செய்திகள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் செய்திக் கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபாவினை செலுத்துவதன் மூலம் இச்செய்தியை விரைவு விநியோகமாக அனுப்பலாம் எனவும் யாழ்/வன்னி தொடர்பு சேவையினர் அறிவித்துள்ளனர்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் வாரத்தில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும் செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சேவையை பெற்றுக் கொள்ள யாழ்ப்பாணத்தில் அர்ச்சுனா வீதி (ஆரியகுளம் சந்திக்கு அருகாமையிலும்) கிளிநொச்சியில் கண்டி வீதி (கிளிநொச்சி தபாலகத்திற்கு அருகாமையிலும்) ஓமந்தையில் தகவல் ஏற்கும் கருமபீடம், சோதனை நிலையம் ஓமந்தையிலும் தொடர்பு கொள்ளலாம்

# காமினி 15-ம் திகதிக்கு பின் பாராளு. உறுப்பினராகலாம்

ஐ. தே. கவில் அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட காமினி திசநாயக்காவிற்கு பதினைந்தாம் திகதிக்குப் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கட்சிமாறல்கள்மற்றும் பதவிவிலகல்கள், புது நியமனங்கள் என்பன அதன்பின் இடம்பெறலாம் என்றும் கூறப்படுகிறது.

பாராளுமன்றத்தில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக இருந்தமையால் இளைப்பாற்று சம்பளம்பெறும் தகுதியை பாராளுமன்ற உறுப்பினர்களில் பலரும் அடுத்த 15ஆம் திகதிக்குப்பின்னர் பெற்றுக்கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் ஐ.தே.கவிலும் சிலர் தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணியிலும் சேரக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# பல்கலை. மாணவன்மரணம் இராணுவத்துக்கு தொடர்பு

(கண்டி)

பேராதனைப் பல்கலைக் கழக மருத்துவ மாணவர் பிரசன்னாஉதயஜீவாவின்மரணத்துடன் சம்பந்தப்பட்டதாக இராணுவத்தை விட்டு தப்பிஓடிய ஒருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிரசன்னாவின்சடலம் வீட்டுக்கு அருகாமையில் இருந்த பாழடைந்த கிணற்றிலிருந்து ஜனவரி ஐந்தாம் திகதி எடுக்கப்பட்டது தெரிந்ததே.

பிரசன்னாவின் சடலம் கண்டி நீதிபதியின் ஆணைப்படி புதைகுழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## காயம்

கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் கனகராயன் குளத்தைச்சேர்ந்த யோகநாதன் பாஸ்கரன் (வயது31) என்பவர் காயமடைந்து யாழ், போதனா மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி நடந்த மேற்படி சம்பவத்தினால் காயமடைந்த இவர் முதலில் முல்லைத்தீவு மருத்துவ மனைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின் அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டு நேற்று யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார்

(சி, ச)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

03.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 589

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

43-2666, 41-8467, 42-2317, 26-6983, 26-1741 26-8052, 26-2345, 26-6983, 24-416, 24-7267 24-6855, 24-9830, 28-9633, 28-3735, 27-8160 27-9779, 27-5045;

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-8746, 24-9596, 24-5119, 28-3029, 27-6205 22-5812, 41-6686, 24-5529, 42-6119, 41-7865 42-7312.


கோல்டன் கொமட்

கோழி குஞ்சுகள் விற்பனை

Christombu Farm Golden Comet, Pullets, Cocarels

கோல்டன் கொமட் பேட்டு குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு

"மல்லிகாபதி"

சந்தை கிழக்கு ஒழுங்கை

மானிப்பாய். (7413)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது